பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 5.00 | பக்கங்கள்:- எட்டு | Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 03 வியாழக்கிழமை (19.09.2002) தொலைபேசி- 2223378 ஒலி 274

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## இராணுவ முகாம்களை தமிழர் தாயகத்தில் அனுமதிக்கமுடியாது

# தமிழர்களுக்கு சுயாட்சி தராவிட்டால் ஆயுதப் போருக்குப் புலிகள் தயார்!

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பேட்டி

(தாய்லாந்திலிருந்து நமது நிருபர் அன்ரனி ஜீவா)



**தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் முழுமையான சுயாட்சி தமிழ் மக்களுக்குத் தரப்படுமானால் அதனைப் பரிசீலனை செய்ய விடுதலைப்புலிகள் அமைப்புத் தயாராகவுள்ளது.**

**அதேவேளை சுயாட்சி அதிகாரம் தமிழ் மக்களுக்குத் தரப்படாமல் அவர்கள் தொடர்ந்தும் ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படுவார்களாக இருந்தால் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று தனி அரசை அமைப்பதற்காக போராடுவதற்கும் தயாராக உள்ளோம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உறுதிபடக் கூறியுள்ளார்.**

கடந்த 3நாட்களாக தாய்லாந்து சட்டாஹிப் கடற்படைத்தளத்தில் இடம்பெற்ற அரசு- புலிகள் சமாதானப்பேச்சுவார்த்தையில் இறுதி நாளான நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் சமாதானப்பேச்சுவார்த்தைக்குத் தலைமை தாங்கிய விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(08ம் பக்கம் பார்க்க)



## அரசு - புலிகள் அடுத்தகட்ட பேச்சுக்கான திகதிகள் அறிவிப்பு

(தாய்லாந்து)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மேலும் மூன்று சுற்றுப் பேச்சுக்களை நடத்துவதற்கு நேற்றைய பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசும் விடுதலைப்புலிகளும் இணங்கியுள்ளதாக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31ம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 3ம் திகதி வரை முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையும்

டிசம்பர் 2ம் திகதியில் இருந்து 5ம் திகதி வரை இரண்டாம் சுற்றுப் பேச்சு வார்த்தையும்,

2003ம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி முதல் 9ம் திகதி வரை மூன்றாம் சுற்றுப் பேச்சு வார்த்தையும் இடம்

(08ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் வெடிபொருள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப் பகுதி வீடொன்றில் இருந்து பெருமளவு வெடிபொருட்



நேற்றைய பேச்சுக்களின் முடிவில் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ், நோர்வே வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

(தாய்லாந்து)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மேலும் மூன்று சுற்றுப் பேச்சுக்களை நடத்துவதற்கு நேற்றைய பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசும் விடுதலைப்புலிகளும் இணங்கியுள்ளதாக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31ம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 3ம் திகதி வரை முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையும்

டிசம்பர் 2ம் திகதியில் இருந்து 5ம் திகதி வரை இரண்டாம் சுற்றுப் பேச்சு வார்த்தையும்,

2003ம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி முதல் 9ம் திகதி வரை மூன்றாம் சுற்றுப் பேச்சு வார்த்தையும் இடம்

(08ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் வெடிபொருள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப் பகுதி வீடொன்றில் இருந்து பெருமளவு வெடிபொருட்கள் ஆயுதங்களை யாழ் பொலிஸார் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து மேற்படி வீட்டை பொலிஸார் சோதனையிட்டபோதே வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக யாழ் பொலிசார்

(08ம் பக்கம் பார்க்க)

## நோர்வே வெளியுறவு அமைச்சர் பிரதமர் ரணிலுடன் அமெ. சந்திப்பு

(நியூயோர்க்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சென் நியூயோர்க்கில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை நியூயோர்க் நகரில் உள்ள விடுதியொன்றில் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையின் போது இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முன்னெடுப்புக்களின் முன்னேற்றம் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழி வகைகளைப் பற்றியும் அபிவிருத்திக் கூட்டங்களை உரியவாறு

(08ம் பக்கம் பார்க்க)

## எஸ்.பியின் ஊழல் நிரூபிக்கப்பட்டால் அவரின் அமைச்சர் பதவியை நீக்குவேன்

### ஜனாதிபதி சந்திரிகா சபதம்

(கொழும்பு)

அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவுக்கு எதிரான 60மில்லியன் பெறுமதியான நில ஊழல் நிரூபிப்படுமாயின் அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்குதவற்கு தான் தயங்கப்போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கொழும்பு விஹாரமாதேவி பூங்கா மண்டபத்தில் நடந்த சமூர்த்தி அலுவலர்கள் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

திஸநாயக்காவுக்கு எதிரான மனு தனது நியாயாதிக்கத்தின் கீழ் வரும் விடயமல்ல, லஞ்ச ஊழல் ஆணைக்குழு அமைச்சரை விசாரணைக்கு எடுக்கவில்லை என்று கூறிய ஜனா

(08ம் பக்கம் பார்க்க)

# புலிகள் சுயாட்சியை விரும்புகின்றனர்- பாலா ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்படும்- பீரிஸ்

## பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிப்பு

(ஜொம்தீன் ஹோட்டலில் இருந்து நமது நிருபர்)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம்பெறுவரும் சமாதானப்பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் தமிழீழ விடுதலைப்புலிகள் உறுதியாக உள்ளனர். இந்நிலை ஏற்படும் போது ஆயுதங்களைக் கீழே வைப்பது குறித்துப் புலிகள் கவனம் செலுத்துவார்கள் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும்

நாடு துண்டுபடாத வகையில் ஐக்கிய இலங்கைக்குள் தமிழீழ விடுதலைப்புலிகளின் நோக்கங்களைப் பூர்த்தி செய்யமுடியும் என்று அரசு தரப்புப் பிரதிநிதிகள் குழுத்தலைவர் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும் தெரிவித்துள்ளனர்.

தாய்லாந்து சட்டாஹிப் கடற்படைத்தளத்தில் 16ந் திகதி முதல் நேற்றுவரை சுமார் 12மணித்தியாலங்கள் வரை நடைபெற்ற நான்கு அமர்வுகள் அடங்கிய பேச்சுவார்த்தையின் பின் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு பத்திரிகையாளர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது.

(08ம் பக்கம் பார்க்க)

## தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சை சித்தியடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஓகஸ்ட் மாதம்நடை பெற்ற தரம் 5புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்வெளியாகியுள்ளன

குடாநாட்டுப் பாடசாலைகள் சிலவற்றி சித்தியடைந்த மாணவர்களின் பெயர்கள் வருமாறு,

**ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை**

க. அனோஜன், சு. சாதனா ச. டினோஜன், ப லக்ஸ்சிகா க. றஜீந்தன், ப சிவஜா.

**யாழ். மத்திய கல்லூரி**

ஜே நிலக்சன், எஸ் சியாம் யு. கோவரத், ஏ. றெஜி ஜோன்சன், என். லக்ஸ்மன், ஆர். டிலக்ஸன், ஜே. துவாரகன், பி. எடிசன்.

**புனித பத்திரிசியார் கல்லூரி**

ஏ. வெனிஸ்லஸ்துஷாந், ஆர். செல்வின். எஸ். ஜோன்சன் சஞ்சீவ்ராஜ், எம். யூரன், கே. ஜேன்ஜோய், ஏ. நிஷந்தன் ஆர்.ஜெ. ஜெயர்சன், ஆர். டறுகன்.

**யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை**

எஸ் நிவேதிகா. ஜ ரேஜினி எஸ் சங்கீதனா, ஆர் சங்கீதா ஏ. சுபகா, ஏ சுபத்திரா, என். தமயந்தி, எஸ் தேவசுகன்யா, ஏ. தேவதர்சினி, ஆர் சரண்யா, என். சஜாளினி, எஸ். செல்லகிளி, கே. தேனுஜா, ரீ. வாணி, ரீ அருணவாகினி, ஆர். கௌதமி, எஸ் ஜோகலக்ஷ்மி, பீ கஜலக்ஷி, ஏ சேசிகா, கே. கிருஷ்நந்தி, ஜி- சிருஷ்ணவேணி எஸ். மதனப்பிரியா, ஆர். மதுரா.

**யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை**

எஸ். சுதன், எஸ். திருவரங்கன், எஸ். ஜருபன், பி. நிலக்சன், ரி. கரிசாந், ரி. யதுர்சன், எஸ். மயூரதன், எஸ் பிரசாந்தன், ஈ. செந்தூரன், ஈ. அனோஜன், எஸ். கீர்த்தன், பி. அரவிந்தன், என். கௌடில்யன், ஜே சரவணன், எம். துவாரகன், எஸ். சுமந்தன், ஈ. கௌசிகன்.

ரி. ஜெனந்தினி, சி திவ்வியா, எஸ். கீதாஞ்சலி, ஆர். வரணிகா, பி. வைஷ்ணவி, ஈ. நிர்த்திகா, எம். கௌசிகா, பி. கஜனுஜா, பி. ஆரணி, எஸ் நிலாஸன், எஸ். தர்சிகரன், வை. விஜயசாயி, கே. வினோதன், எஸ். கஜதரன், என். சௌதாமினி, எம். லிபியா,

எஸ் சுபந்தா, எஸ். வைஷ்ணவி வி. மிரஜா, எல். யதூசன், கே. சாயிஸ்காந், என், சதீஸ்காந், எஸ். சிவமனோகர், என். நிரோசன், ரி. ஜெனந்தன், கே. கிருஷோபன், எஸ் ரிசிகேசன், கே. உதயராஜ், ஏ. அலெக்ஸ் உமாசங்கர், எஸ். கஸ்தூரி, எஸ் விதுர்சரணி, வி. ஆரணி, வி. வைஷ்ணி, வி. சிவராசன், கே. கபிலேசன், வி. தனுஜன், என். பிரணவருபன், என். யதுஷ்யன், கே. கௌரிசங்கரி, கே. நிஷாந். எஸ். ஜெனீஸ்ரன், பி. அஜந்தன், ஈ திலக்ஷி, என். நேமிகா, ரி. நிஷாந், பி ரகோஜன், கே. பிரசாந், எஸ். சோபிதன், எஸ். கஜீதரன்,

கே. துவாரகன், கே. பிரதீபன், என். ராகுலன், எஸ். சாரங்கன், எஸ். சண்ஜீரன், ரி. கீர்த்திகன், ஏ. பிரதீபன், ஜே ஜெனித்தா, ரி. கஜலக்ஷி, கே. வினோஜா, கே. அனுஷன், ப. பானுஸ்ரீ. (உ-19)

---

## தியாகி திலீபனின் நினைவுகள்



### உன் இலட்சியம் நிலைக்கும்

பாயும்புலியாகப் புறப்பட்ட பார்த்தீபா!
தீயின் தணலாகத் திரண்டெழுந்த செந்தமிழா!
சாயுந் தமிழினத்தின் உரிமைக்காய்
உழைத்தோனே!
வாயுடன் வயிறடக்கி வெற்றிகண்டாய்
கொள்கையிலே;

வரியுடைப் புலியாக வீறுகொண்டு சென்றவனே!
சரியுமெம் உரிமைக்காய்ச் சளைக்காதுழைத்தோனே!
எரியும் நெருப்பாக எழுச்சிகொண்டு சென்றோர்க்கு
தெரியும் அகிம்சையென்று புரிந்திடவைத்தவனே

இலட்சியத்தின் நாயகனே! இமையமுயர் திலீபனே!
இலட்சியத்தை வென்றெடுக்க உணவின்றி
உயிர்துறந்தாய்
இலட்சோபம் இதயத்தில் இறையாக உறைவோனே!
நிலைத்திடுமுன் இலட்சியங்கள் நாளையிது
நிஜமாகும்.

நீர்வைக் கலைவரன்

---

## மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளித்த ரணிலுக்கும் - தலைவர் பிரபாவுக்கும் சமாதானத்திற்கான நோபல் பரிசு

### வழங்குமாறு பிரிட்டிஷ் ஆளும் கட்சி உறுப்பினர் வலியுறுத்து

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவிற்கும் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்கும் சமாதானதிற்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என சர்வதேச அகதிகள் சம்மேளன இயக்குநரும் இலண்டன் 'தமிழினி' பத்திரிகையின் ஆசிரியருமான குலேந்திரன் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வந்த கோர யுத்தத்தையும், மனித அழிவுகளையும்கடுத்து நிறுத்தி மக்கள் தீர்ப்புக்கு தலைவணங்கி பேரினவாத சக்திகளின் எதிர்ப்புக்களை முறியடித்து சிங்கள-தமிழ் முஸ்லிம் மக்கள் சமாதானத்துடன் நிம்மதியாக சுதந்திரக் காற்றை சுவாசிக்கவழிசமைத்தவர்கள் இவர்கள் என்ற ரீதியிலேயே சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்குவது குறித்து அவர்வலியுறுத்தவுள்ளார்.

பிரிட்டன் ஆளுங்கட்சியான தொழிற் கட்சியின் உறுப்பினரான இவர்பிரிட்டன்பிரதமர் ரொனிபிளேயர் மூலமாக தனது கோரிக்கையை வலியுறுத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

(உ-3)

---

## அரச ஊழியர்கள் சேவை 57 வயது வரை நீடிப்பு

### அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை

1996 08 30 ஆந் திகதிய27/96ஆம் இலக்க மற்றும் 1997.09.25ஆந் திகதிய 21/97ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் மூலமாக செய்யப்பட்ட திருத்தங்களும் அடங்கலாக தாபன விதிக்கோவையில் Vஆம் அத்தியாயத்தில் 5ஆவது பிரிவிற்குப் பதிலாக பின்குறிப்பிடப்படும் பிரிவை2002 யூலை31ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பதிலீடு செய்யப்படுகின்றது.

02.5 -ஓய்வுபெறச் செய்வித்தல்.

5.1 அரசு அலுவலரொருவரினது ஓய்வுபெறச் செய்வித்தலானது அரசின் மற்றும் நீதித்துறை அலுவலர்களினது (ஓய்வுபெறச் செய்வித்தலின்) கட்டளைச்சட்டமும் அதன் கீழ் விதிக்கப்பட்ட சட்டங்களின் கீழும் நிருவகிக்கப்படுகின்றது.

5.2 அலுவலரொருவரினது விருப்புக்குரிய ஓய்வுபெறச் செய்விக்கும் வயது55 ஆகும்.

5 3 கீழ்குறிப்பிடப்படும் உபபிரிவுகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் பருடாந்தம் சேவை நீடிப்பின்றி 57வயதுவரை அலுவலரொருவருக்கு சேவையில் ஈடுபடுவதற்கு இயலும்.

5.3.1 55வயதை கடந்த அலுவலரொருவருக்கு தமது விருப்பப்படி குறைந்தபட்சம் மூன்றுமாதத்திற்கு முன்பு சம்மந்தப்பட்ட நியமன அதிகாரிக்கு அறிவிப்புசெய்து ஓய்வுபெறுவதற்கு இயலும்.

5:3:2 55ஆவது வயதைகடந்த அலுவலரொருவரினது வினைத்திறமையும் சேவைநிலைமையும் திருப்திகரமற்றது என நியமனஅதிகாரி தீர்மானிப்பாராயின் மூன்று மாதகால அவகாசத்தின் பின்பு ஓய்வுபெறச்செய்விக்கும் உரிமை நியமன அதிகாரியை சார்ந்திருக்கும்.

5:4 சேவை நீடிப்பு சம்பந்தமாக நியமன அதிகாரியினால் வழங்கப்பட்டுள்ள கட்டளை தொடர்பாக அந்தக் கட்டளைக்கு பாத்திரமான அலுவலரினால் முன்வைக்கப்படும் மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் உரியவாறு மேன்முறையீட்டு அதிகாரத்துவத்தை வகிக்கும், அமைச்சரவைக்கு அல்லது அரசு சேவை ஆணைக்குழுவிற்கு அந்தக் கட்டளையை நிராகரிப்பதற்கோ அல்லது மாற்றுவதற்கோ அல்லது இரத்துச்செய்வதற்கோ அதிகாரம் உள்ளது.

5:5 பின் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கமைய சேவையின் தேவைக்கேற்ப அரசு அலுவலரொருவரினது சேவை 57 வயதிலிருந்து 60 வரை நீடிப்பு செய்யும் அதிகாரம் நியமன அதிகாரியை சார்ந்திருக்கும்.

5.5 1 57 வயதின் பின்பு சேவையாற்றுவதற்கு எண்ணும் அலுவலரொருவர் தமது சேவையை நீடிப்பு செய்வதற்காக விண்ணப்பபத்திரத்தை திணைக்களத் தலைவர் ஊடாக, நியமன அதிகாரியிடம் வருடாந்தம் முன்வைத்தல் வேண்டும். முதலாவது சேவை நீடிப்புக்கான கோரிக்கையை அலுவலரினது 57 ஆவது வயதை அடையும் திகதிக்கு ஆறு மாதத்திற்கு முன்பும், அதன் பிறகு 60 வயது வரையிலான சேவை நீடிப்புக்கான கோரிக்கைகளை சேவை நீடிப்பு ஆரம்பிக்கும் திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன்பும் முன்வைத்தல் வேண்டும். அந்தக் கோரிக்கைகள் தொடர்பாக கவனத்திற் கொண்டு பார்த்து நியமன அதிகாரியினால் சேவை நீடித்தல் வழங்குதல் தொடர்பாக தீர்மானித்தல் வேண்டும்.

5:5:2 நியமன அதிகாரி அமைச்சரவையாகும் சந்தர்ப்பத்தில் 5:5:1 உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய திகதிக்கு முன்பு உரிய அமைச்சின் செயலாளரிடம் சேவை நீடிப்பிற்கான கோரிக்கையை முன்வைத்தல் வேண்டும். செயலாளரினால் சம்பந்தப்பட்ட அமைச்சரை விசாரித்து சேவை நீடிப்பை வழங்குதல் தொடர்பாக தீர்மானித்தல் வேண்டும். சேவை நீடிப்பை நிராகரிப்பதென்றால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அந்ததீர்மானத்தை அமைச்சரவைக்கு முன் வைத்தல் வேண்டும்.

5:5:3 அலுவலரொருவரினது சேவைநீடிப்பு செய்யும்கால எல்லையை அவருக்கு அறிவிக்க வேண்டியதுடன் ஒரு முறைக்கு ஒரு வருடத்திற்கு மேலான காலத்திற்கு சேவை நீடிப்பு செய்தலாகாது.

5:6 ஒழுக்காற்று கட்டளையாகாவிட்டால் அலுவலரொருவரினது.ஓய்வூதியத்திற்காக கணக்கில் எடுக்கப்பட வேண்டிய சேவைக் காலம் பத்து வருடத்திற்கு மேல் குறைவாக இருப்பின் பத்து வருடம் பூர்த்தியாகும் திகதி அல்லதுஅலுவலரொருவரினது 60 வயது பூர்த்தியாகும் திகதி ஆகிய இரண்டு திகதிகளில் முன்னராக வரும் திகதிக்கு முன்பு மேற்படி ஏற்பாடுகளின் கீழ் அலுவலரொருவரை ஓய்வு பெறச் செய்விப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரி நடவடிக்கை எடுத்தலாகாது.

---

## துண்டி மயானம் பாவனைக்கு விடப்பட்டுள்ளது

(கொழும்புத்துறை)

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக பாவனைக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த துண்டி மயானம் நேற்று முதல் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

மயானத்தில் சடலங்களை தகனம் செய்யவேண்டுமாயின் சிவில் நிர்வாக காரியாலயத்தில் முன் அனுமதி பெறவேண்டும். அத்துடன் இம்மயானத்திற்கு துண்டிச் சந்தியூடாகவே செல்லவேண்டும் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-262)

---

## இராசி பலன்

19.9 2002
(புரட்டாதி 3 வியாழன்)
திரயோதசி பி.ப 4 38 வரை
அவிட்டம் பி.ப 2.00 வரை
இராகுகாலம்- 1.32- 3 02
நல்ல நேரம்- 7.32-9.02

**மேடம்**

எதிர்பாராத நன்மை, தனலாபம், காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி.

**இடபம்**

அதிகாரம், கடுமையான முயற்சி, பிறர் உதவி, நல்ல செய்தி.

**மிதுனம்**

உடல்நலக் குறைவு, முயற்சி தாமதம், திடீர் பயணம், தந்தை வழி உறவு.

**கடகம்**

அமைதிக் குறைவு, தொழில் கஷ்டம், உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல்.

**சிங்கம்**

பிரயாண நன்மை, காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, தனவரவு

**கன்னி**

செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், மன மகிழ்ச்சி, உடல் நலம்.

**துலாம்**

வியாபார இலாபம், விரும்பிய இடம் செல்லமுடியாமை, மனச் சஞ்சலம், குடும்பக் கவலை.

**விருச்சிகம்**

தன்னம்பிக்கைக் குறைவு, அற்பர்உறவு, காரிய தாமதம், மாணவகல்விச்சிறப்பு.

**தனுசு**

கூட்டு முயற்சி, செய்தொழில் விருத்தி, அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை

**மகரம்**

கௌரவக் குறைவு தனவிரயம், தேவையற்ற விவாதம், காரிய தாமதம்.

**கும்பம்**

தெய்வ சிந்தை, புதிய பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி.

**மீனம்**

பிதா சிந்தை, கோபப்படுதல், முயற்சி தாமதம், திடீர் பயணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# இன்று ஒரு தகவல்

## எது ஞானம் பெறும் வழி?

ஓர் ஊரில் ஒரு இராஜா இருந்தார். அந்த இராஜாவுக்கு ஒரு இராணி, அவர்களுடைய அரண்மனைக்குப் பெரிய பெரிய ஞானிகள் வருவது வழக்கம். அவர்களுடைய உபதேசங்களை அந்தஇராணி தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். அதன் விளைவு, அவளும் ஒரு ஞானியாகி விட்டாள. ஞானிமட்டும் இல்லை. தன்னுடைய உருவத்தைமாற்றிக் கொண்டு ஆகாயத்தில் பறக்கும் சித்தியும் அவளுக்கு கிடைத்து விட்டது. நினைத்தால் பறக்கலாம்... அப்படிப்பட்ட சக்தி வந்து விட்டது. இராஜா பார்த்தார். உடனே இராணியிடம் போனார். இதோ பார்! நானும் உன்னைப் போல ஞானி ஆகவேண்டும் எனக்கு ஏதாவதுஉபதேசம்செய்என்று கேட்டுக் கொண்டார்.

'நீங்கள்ஞானியாகவேண்டுமென்றால் எல்லாவற்றையும் துறப்பதற்குத் தயாராக இருக்கவேணடும். எல்லாவற்றையும் விட்டுவிடுகிற அளவுக்கு வைராக்கியம் இன்னும் உங்களுக்கு வரவில்லை..' என்றாள் இராணி. 'சரி' என்று பேசாமல் இருந்து விட்டார் இராஜா. கொஞ்சகாலம் ஆனது. அந்த இராஜா காட்டுக்குப் போய் தவம பண்ணவேண்டுமென்று ஆசைப்பட்டார். ஆனால் இராணிக்கு அதிலே இஷ்டம் இல்லை. அதனால் அவர் சம்மதிக்கவில்லை. இராஜா பார்த்தார். அவருக்கா வழி தெரியாது? அவர் சொல்லாமல்கொள்ளாமல் ஒரு நாள் இரவு புறப்பட்டுக் காட்டுக்குப போய் விட்டார்.

இராணி பார்த்தார்' அதுதான ஆகாயத்தில் பறக்கும் சக்தி அவளுக்கு ஏற்கனவே கிடைத்திருக்கிறதே! இளம் முனிவர் மாதிரி தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொண்டார் புறப்பட்டுப் பறந்து போனாள்... காட்டுக்குள் இராஜா எங்கேயிருக்கிறார் என்பது தெரிந்தது. நேராக இராஜாவுக்கு முன்னால் போய் இறங்கினார் இந்த இளம் முனிவர். அதுதான் அந்த இராணி. இராஜா தன்எதிரில் இளம்முனிவரைப் பார்த்தார். வணங்கினார். 'நான் வெகு காலமாக தவம் செய்கிறேன். ஆனால் மனநிம்மதி எனக்குஇன்னும்கிடைக்கவில்லை. தாஙகள தான்அருள் புரியவேண்டும்' என்றார்.

அதற்கு அந்த இளம் முனிவர் 'எலலாவற்றையும்துறக்க வேண்டும் என்று உங்கள் மனைவி ஒருசமயம் உபதேசம் பண்ணினாளே! அதன்பிரகாரம் எல்லாவற்றையும் விட்டு விட்டீர்களா? என்று கேட்டார், 'எல்லாவற்றையும் விட்டு விட்டேன், இன்னும் இந்த ஆசிரமத்தைத்தான் துறக்க விலலை.' என்று சொல்லிக் கொண்டே ஆச்சிரமத்திலிருந்தஒவ்வொருபொருளாக எடுத்து அக்கினியில் போட்டார். 'இப்போது போடுகிறீர்களே.. இந்தப் பொருளகள் உங்களுக்குச் சொந்தம்இல்லையே..! இவையெல்லாம் பிரகிருதிக்கு; அல்லவா சொந்தம்? என்றார் இளம் முனிவர் 'சரி.. அப்படி என்றால் என்னுடைய உடம்மை நான் துறக்கிறேன்' என்றார் இராஜா! இப்படிச் சொல்லிவிட்டு நெருப்பிலே குதிக்கப் போனார். இளம் முனிவர் இராஜாவைஉடனே தடுத்து நிறுத்தினார்.

'உடம்பும் உங்களுக்குச் சொந்தம் இல்லையே? அவை பஞ்சபூதங்களுக்கு அல்லவா சொந்தம்' என்றார். இராஜா யோசித்தார். அப்படி என்றால் எனக்கு என்னதான் சொந்தம். என்று கேட்டார். உங்கள் அகங்காரம் தான் உங்களுக்குச் சொந்தம், நீங்கள் துறக்க வேண்டியது அதைத்தான். அதை விடுங்கள் முதலில்! அது உங்களிடம் இருப்பதனாலே தான் இந்த உலகமே உங்களிடம் இருப்பதாக நினைக்கிறீர்கள். அகங்காரம் இருப்பதனால் இந்த உலகப் பொருள்கள் உங்களுக்குச் சொந்தம் என்று தோன்றுகிறது' என்று இளம முனிவர் உருவத்தில் இருந்த இராணி சொன்னார். உடனே 'இதோ என்னிடம் இருக்கிற அகங்காரத்தை விட்டு விட்டேன்!' எனறார் இராஜா. அதன் பின்னர்தான் அந்த இராஜாவும் ஞானி ஆனார். இராணிக்குக் கிடைத்தது மாதிரியான சித்தி அவருக்கும் கிடைத்தது.

'இந்தக் கதையை மிகவும் சீரியஸாக ஒருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் உடனே சொனனார். 'சித்தியடைய வேண்டும் என்பதற்காக அந்த ராஜா அவ்வளவு தூரம் கஷ்டப்பட்டிருக்கறார். 'நான் கூட சித்தியடைந்திருக்கிறேன். ஆனால் அவ்வளவுகஷ்டப்படவில்லை' என்றார். உங்களுக்குச் சுலபமாக சித்தி கிடைத்ததற்கு யார் காரணம்? என்று கேட்டேன். 'எங்கள் அப்பர் தான் காரணம். அவர் இரண்டாவதாக ஒரு கல்யாணம் பண்ணினார். உடனே 'சித்தி' வீட்டுக்கு வந்து விட்டார்கள். எனக்குச் சித்தி கிடைத்த கதை இது தான்' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயமாக்கும்
# முயற்சிகளை கைவிடவேண்டும்
# ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைதனியார் மயப்படுத்தும் முயற்சிகளை கைவிடவேண்டுமென்று ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்டுளள அறிக்கையொன்றில் கேட்கப்பட்டுள்ளது.

அண்மையில் இது பற்றி அமைச்சரவையில் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் இது தொடர்பாக பின்பற்றப்படவேண்டிய சாதாரண கேள்வி நடைமுறைகள் பின் பற்றப்படவில்லை. அத்துடன் எரிபொருட்களை தேசிய பாதுகாப்புடன் தொடர்புடையது என்பதால் இவ்விடயத்தில் அவசரமாக தீர்மானம் எதுவும் எடுக்க முடியாது. இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் பிரதமரின் ஆலோசகர் ஆர். பாஸ்கரலிங்கம் வகிக்கும் பொறுப்புகள் பற்றியும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 பெப்ரவரி 13 ஆம் திகதிக் கடிதத்தில் பாஸ்கரலிங்கத்தை ஆலோசராக நியமிக்கவேண்டும் என்று பிரதமருக்கு ஜனாதிபதி ஆலோசனை தெரிவித்திருந்தார். அத்தகையவரின் முன் முயற்சிகளால் நடைபெறக்கூடிய தனியார் மயமாக்கல் ஊழலுக்கு இடமளிப்பதாக இருக்கும். 1989-94 காலப்பகுதியில் இவ்வாறு நடந்துள்ளது என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சபுகஸ்கந்தையில் நிறுவப்படவிருக்கும் சுத்திகரிப்பு நிலையம் முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்ற தென்றும், சமாதான நடவடிக்கைகள் தொடங்கிய பின்னர் தொடக்கப்படும் முதலாவது பாரிய திட்டமென்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கப்படவில்லை எனவும் அது தெரிவித்துள்ளது. (உ)

## வலைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி விளையாட்டு அவை நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை ஆரம்பமாகின்றது.

இதில் காலை 9.00மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலை வி.க எதிர் தேசிய கல்வியியற் கல்லூரி வி.க ஆகியன மோதவுளளன. (உ-3)

## கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை பி. ப. 1.30 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் கலாசார விழா இடப்பெறவுள்ளது.

பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ. மரியசேவியரும், சிறப்பு விருந்தினர்களாக வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க. பொன்னம்பலம், கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் கே. வி. சிவனேசன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

## வட-கிழக்கு மாகாணசபை பதில் பிரதம செயலாளராக ரங்கராஜன் நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பதில்பிரதம செயலாளராக எஸ். ரங்கராஜன் கடந்த திங்கட்கிழமை மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை திட்டமிடல் சேவையைச்சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியான இவர்தற்போது மாகாண ஆளுநரின் செயலாளராக கடமையாற்றிவருகின்றார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராகஇருந்த ஜி. கிருஷ்ணமூர்த்தி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறுவதையடுத்தே இவருக்கு இப்புதிய நியமனம வழங்கப்பட்டுள்ளது. (உ-3)

## மனநோயாளிக்கு எதிரான வழக்கு வாபஸ்

(யாழ்ப்பாணம்)

சிறுகுற்றங்களுக்காகபொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நல்லூர் வாசியை நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தபோது,

அவர் மனநோயாளி என்பது நிரூபிக்கப்பட்டதன் பேரில், பிரஸ்தாப நபருக்கு எதிரான வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

இதேவேளை, மேற்படி மனநோயாளியை உறவினர்கள் பொறுப்பேற்க மறுத்ததையடுத்து கைதடி முதியோர் இல்லமனநோயாளர்பிரிவுக்கு அனுப்புமாறு மேலதிக நீதிபதி திருமதி இளங்கோவன் உத்தரவிட்டார். (உ-6)

## கடற்றொழில் விருத்திக்கு நொறாட் நிதியுதவி

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்கென நொறாட் நிறுவனம் 34 இலட்சம் ரூபாவை வழங்கவுளளது.

புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சு, கடற்றொழில் கடல்வள அமைச்சு ஆகியவற்றின் உதவியுடன், இந்நிதி மூலமான அபிவிருத்தி மேற் கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மீன்பிடிவளஙகளைபுனரமைப்பு செய்வதற்கு முன்னுரிமையளிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இரண்டு வலைத்தொழிற்சாலைகளை புதிதாக அமைப்பதற்கு இந்நிறுவனத்தால் சுமார் 2கோடி 50 இலட்சம் ரூபா நிதி இலகு கடன அல்லது நனகொடையாக வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பாடசாலைகளை மீள இயக்குவதில் அதிபர்கள் அசமந்தம்

(யாழ்ப்பாணம்)

அரியாலைப்பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளசிலபாடசாலைகளை மீளஇயக்க அதிபர்கள் பின்னடித்து வருவதாக பெற்றோர்தரப்பில்அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம் அரியாலை கிழக்குஅரசினர் தமிழ்க்கலவன்பாடசாலை, பூம்புகார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைஆகியவை கடந்த கால போர் அனர்த்தங்களினால்இடம்பெயர்ந்து வேறு பகுதிப பாடசாலைகளுடன இணைந்துஇயஙகிவருகினறன

மேற்படி பாடசாலைகளை அண்டிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்த நிலையிலும் அவை இயங்காமையால் மாணவர்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (உ-19)

## புதிய செயற்றிட்ட அதிகாரி நியமனம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலக செயற்றிட்ட அதிகாரியாக நேற்று முன்தினம்முதல் வ. வேளினி நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவியை வகித்து வந்த எம்.எவ். றயீஸ், மன்னார் மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே புதியவர் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-6)

## மனித உரிமைகள் ஆ. கு. தலைவர் பதவிக்கு எவரும் நியமிக்கப்படவில்லை

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவி நீணடகாலமாக வெற்றிடமாக உள்ளதால் அவ்வாணைக்குழுவால் விசாரணை செய்யும வழக்குகளின் முடிவுகளை எடுப்பதில் சிரமம் ஏற்பட்டு வருவதாக பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் வழக்கு விசாரணை ஒன்றின் போது நீதியரசர் இதனைப் பகிரங்காக தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றில் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்படும் சில முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் சமர்ப்பிக்கப்படுகினறன.

இவ்வாறான வழக்கு விசாரணைகள் பற்றிய முடிவுகளை, உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் அதிகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கே உண்டெனவும் நீதியரசர்சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## சோக்கெல்லோ சண்முகம் பேச்சுக்கலையில் உலக சாதனை படைக்க முயற்சி


(யாழ்ப்பாணம்)

மக்கள் கலைஞர் சோக்கெல்லோ சண்முகம் எதிர்வரும் 20ஆம்திகதி வெள்ளிக்கிழமை பேச்சுக்கலையில் உலக சாதனை நிகழ்த்தவுள்ளார்.

'நானும் தமிழும்' எனும் தலைப்பில் தொடர்ந்து ஏழரை மணிநேரம் உரையாற்றி ஏற்கனவே உலக சாதனை ஏட்டில் பதியப்பட்டுளள பேச்சுக்கலைச் சாதனையை முறியடிக்கவுள்ளார்.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்நிகழ்வு, வெள்ளவத்தை பெண்கள் கல்வி ஆய்வு நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# விடுதலைப் புலிகள் மீது விதித்த தடையை இந்தியா நீக்க வேண்டும்
## வை.கோ.கோரிக்கை



(சென்னை)

தாய்லாந்தில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே நடை பெற்று வரும் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக அமைவதற்கு ஏதுவாக இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்டுள்ள தடையை மத்திய அரசு நீக்க வேண்டும் என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கேட்டுள்ளார்.

பொடா சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள வை.கோ தனது வழக்கறிஞர் நன்மாறன் மூலமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதிலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்விற்கும், அந்த நாட்டு அரசுக்கும், விடுதலைப் புலகளுக்கும இடையேயான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைவதற்கும் இந்தியா தனது முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும்,

நீடித்த பலனைக் கருதியும், பூகோள அமைப்பிலான அரசியல் நிலைமையைக் கருத்தில் கொண்டும் இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை அரசு திரும்பப் பெறவேண்டும் என்றும் வை.கோ அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (உ)

# சூரியக் குடும்பத்திற்கு வெளியே நூறாவது கிரகம்
### ஆஸி. வானியலாளர் கண்டுபிடிப்பு

(லண்டன்)

ஆசியாவில் வைக்கப்பட்டிருக்கும் தொலை நோக்கிக் கருவி ஒன்றின் ஊடாக நூறாவது கிரகம் கண்ட பிடிக்கப்பட்டுள்ளது.

சூரியக்குடும்பத்திற்கு வெளியே காணப்படும் இக் கிரகத்தை பிரிட்டிஷ் மற்றும் அவுஸ்திரேலிய வானியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

வியாழக் கிரகத்தைப் போல் தோற்றம் அளிக்கும் இந்தப் புதிய கிரகம் வாயுக்கள் அடங்கியதும் மிகப் பிரமாண்டமானதுமாகும்

எனினும், உயிர் வாழக் கூடிய ஏதுவான சூழ்நிலைகள் இப்புதிய கிரகத்தில் காணப்படாது விடினும், இக்கிரகத்தை சுற்றிவரும் ஏனைய துணைக் கிரகங்களில் உயிர் வாழககூடிய அறிகுறிகள் காணப் படலாம் என ஆராய்ச்சியில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டுகளில் இவ்வாறான புதிய கிரகங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-7)

### ஈராக்மீது தாக்குதல்
# பிரி. பாராளுமன்றில் வாக்கெடுப்புக்கு கோரிக்கை

(லண்டன்)


ஈராக் மீது தா[illegible]தல் நடத்தப்பட வேண்டுமா என்பது குறித்த பிரிட்டிஷ் பாராளுமன[illegible]த்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என தொழிற் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈராக் தாக்கப்படுவது தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த பிரதமர் ரொனி பிளேயர் கடந்த வாரம் ஒத்துக் கொண்டுள்ளார்.

ஆனால் இம்மாதம் 24ஆம் திகதி நடக்கவிருக்கும் இந்த விவாதத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்படுவது குறித்துத் திட்டம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இதேவேளை, பிரிட்டிஷ் வெளியுறவுச்செயலர் ஈராக்மீது தாக்குதல் நடத்தப்பட வேண்டு மென ஐக்கிய நாடுகள் சபையில் பேசியதை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினரான எலைஸ் மாஹென் எதிர்த்துள்ளார்.

ஈராக் தாக்கப்படுவதை எதிர்த்து வாக்களிக்க தொழிற்கட்சி உறுப்பினர்கள் சுமார் 100பேர் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ - 3)



டெல்லியில் மெட்ரோ ரயிலை சோதனை ஓட்டமாக துவக்கி வைத்தார் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி.

## தாக்குதல் முடிவில் மாற்றமில்லை

(ரெல் அவிவ்)

ஐக்கிய நாடுகளின் ஆயுதக் கண் காணிப்பாளர்களை எதுவித நிபந்தனையும் இன்றி அனுமதிக்க ஈராக் இணங்கியிருப்பதானது அதன் மீதான அமெரிக்கா உத்தேச தாக்குதல்களின் ஆரம்ப நடவடிக்கைகளை எவ்விதத்திலும் மாற்றப் போவது இல்லை என்று இஷ்ரேல ராணுவத் தளபதி கூறியுள்ளார். (உ)

## வேலை நீக்கம்

(பொகட்டி)

கொலம்பிய ஜனாதிபதி அல்வாரோயுரைபின் வலதுசாரி நிலைப்பாட்டை எதிர்த்து அரச ஊழியர்கள் திங்களன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். (உ)

WORLD NEWS உலக தரிசனம்

# சுரங்க வழி புகையிரதம் இந்தியாவில் வெள்ளோட்டம

(புதுடில்லி)

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் முதன் முதலாக சுரங்கவழி புகையிரதம் நேற்று முன்தினம் வெள்ளோடடம் விடப்பட்டுள்ளது.

இந்தியத் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி கொடிஅசைத்து, புகையிரத தொடக்கப் பயணத்தை ஆரம்பித்து வைத்தார்.

1998ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சுரங்கவழி புகையிரச் சேவைக்கான வேலைப்பாடுகள் இன்னும் 3ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் எனவும் இதனால் போக்குவரத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்யும் வாகனங்களின் எண்ணிக்கை குறையுமென்றும் அத்வானி வெள்ளோட்டத்தை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். (உ-7)

# ஜப்பானிடம் மன்னிப்புக் கோரிய வடகொரியத் தலைவர்

(ப்யொங்யொங்)

வடகொரியா 1970,1980களில் 12 ஜப்பானியர்களைக் கடத்திச் சென்றதாக வடகொரியத் தலைவர் ஜங் கொங் முதன் முதலாக ஒப்புக் கொண்டுள்ளார்.

வடகொரியத் தலைநகரில் ஜப்பானியப்பிரதமர் வடகொரியத் தலைவர் ஜங்கொங்கைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே இதனை ஒப்புக் கொண்டார்.

வடகொரிய உளவாளிகள் ஜப்பானிய மொழியையும் ஜப்பானியர்களது பழக்க வழக்கங்களையும் கற்பதற்காகவே மேற்படி 12பேரையும் கடத்திச் சென்றதாகவும்இவர்களை வடகொரிய இராணுவத்தினரே கடத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் 8பேர் இறந்து விட்டதாகத் தெரிவித்த வடகொரியத் தலைவர் அதற்காகத் தான் மன்னிப்புக் கோருவதாகவும்,

மிகுதி நான்கு பேரையும் விரைவில் ஜப்பானுக்குத் திருப்பி அனுப்ப முடிவு செய்திருப்பதாகவும் குறிப்பிட்டார். (உ-7)

### பிரசாரத் தட்டி
# மின்கம்பிகளுடன் முட்டி 9பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள ராவல்பண்டி என்ற இடத்தில் தேர்தல் பிரசாரத் தட்டி, அதி உச்ச மின் கம்பிகளுடன் உரசியதால் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் 9பேர் உயிரிழந்துள்ளனர் மூவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

பாகிஸ்தானில் எதிர்வரும் அக்டோபர் மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்காக நிர்மாணிக்கப்பட்ட பாரிய தேர்தல் பிரசாரத்தட்டியினாலேயே இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இச்சம்பவம் பற்றிய விசாரணைகளை உடன் நடத்து மாறு பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாராப் அதிகாரிகளை பணித்துள்ளார். (உ)

# முதல்வர் ஜெயா சிறந்த பெண் இல்லையா?

(புதுடில்லி)

இந்தியாவின் சிறந்த 10பெண்களில் ஜெயலலிதாவிற்கு இடமில்லை. சோனியாவிற்கு மூன்றாவது இடம் கிடைத்துள்ளது.

இந்தியாவின் சிறந்த பெண்மணிகளை தேர்ந்தெடுப்பதில் ''தி வீக்'' பத்திரிகையும், 'டி.என் சாபாஸ் மோட்' என்ற நிறுவனமும் சேர்ந்து நடத்திய இக் கருத்துக் கணிப்பில் கிரென்பேடிக்கு முதலாவது இடமும் சோனியா காந்திக்கு 3வது இடமும் கிடைத்துள்ளது.

கிரென்பேடி பெண் பொலிஸ் அதிகாரியாகவும், திகார் சிறை சூப்பிரண்டாகவும் பணியாற்றியுள்ளார்.

இதேவேளை, இத்தாலி நாட்டைச சேர்ந்த சோனியா காந்தியை இந்தியப் பிரதமரா்க விடமாட்டேன் என்று கூறிய ஜெயலலிதாவுக்குப் பட்டியலில் இடம் கிடைக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ - 3)



காஷ்மீர் மாநிலத்தில் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலையும் மீற தங்களது வாக்கைச் செலுத்தும் பெண்கள்.

# இஸ்லாமியத் தீவிரவாதிகளைத் தேடிப்பிடிப்பது தொடரும்
### முஷாரப் பகிரங்க அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அடைக்கலம் புகுந்துள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகளைத் தேடிப்பிடிக்கும் நடவடிக்கைகள் தொடருமென பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க நகரத்தின் மீதான கடந்த வருடம் செப்ரம்பர் 11ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் முக்கிய சந்தேக நபரும், அல்கெய்டா இயக்கத்தின் பிரதான உறுப்பினருமான ரம்ஜி பினால்ஷிப் மற்றும் 4சந்தேக நபர்களையும் கைது செய்து அமெரிக்காவிடம் தாம் ஒப்படைத்தது இதன் அடிப்படையிலேயே எனவும் முஷாரப சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதிகளை கூண்டோடு அழிக்கும் நோக்கில் அமெரிக்க மேற்கொண்ட தாக்குதலை அடுத்து தலைமறைவாகி பாகிஸ்தானில் நுழைந்த தீவிரவாதிகளைக் கைதுசெய்யும் நடவடிக்கையில் தாம் தொடர்ந்தும் முழுமூச்சாகப் பாடுபடப்போவதாகவும் முஷாரப் தெரிவித்துள்ளார். (உ)

# மத்திய கிழக்காசியாவில் முக்கிய அலகெய்டாக்கள்
### அடுத்த தாக்குதலுக்கு முஸ்தீபு

(லாஸ் ஏஞ்சல்ஸ்)

ஆப்கானிஸ்தானிலிருந்து தப்பியோடிய சர்வதேச பயங்கரவாதியான ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் மத்திய கிழக்காசியாவில் உள்ள நாடுகளில் மீண்டும் ஒன்று சேர்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன

முக்கியமாக ஈரான், சிரியா மற்றும் லெபனான் ஆகிய நாடுகளில் இவர்கள் த[illegible]ஞ்சமடைகின்றதாகவும், முக்கிய அ[illegible]கெய்டா உறுப்பினர்கள் லெபனானில உள்ள பலஸ்தீன அகதிகள் முகாமிற்குச் சென்றுவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அல்கெய்டா உறுப்பினர்கள் எவரும் தமது நாட்டில் இல்லை என்றும், இவ் முகாம் யஸீர் அரபாத்தின் படாக் இயக்கத்தைச் சேர்ந்த பலஸ்தீனியர்கள் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தமது கட்டுப்பாட்டில் இல்லை என்றும் லெபனான் அரசு அறிவித்துள்ளது.

மேலும், அல்கெய்டா தீவிரவாதிகளை ஈரானின் புரட்சிகர படையினர் தீவிரமாக ஆதரித்து வருவதாகவும் அரேபிய புலனாய்வுத் துறை வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத் தீவிரவாதிகள் இணடர் நெற்றை மிகவும் சுதந்திரமாகக் கையாண்டு ஏனைய தீவிரவாதக் குழுக்களுக்குப் பணம் அனுப்பி வருவதாகவும்,

மீண்டும் இவர்கள் பாரியளவிலான தாக்குதலை நடத்தத்திட்டமிட்டு வருவதாகவும் ஈராக் அதிபர் சதாம் ஹுஸைனுக்கு நெருங்கிய தொடர்பிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ - 3)



டெல்லியில் முதல் முறையாக நேற்று முன்தினம ''மெட்ரோ ரயில்'' சோதனை ஓட்டமாகத் துவக்கி வைக்கப்பட்டது. இந்த மெட்ரோ ரயிலை கொடியசைத்துத் துவக்கி வைத்துப் பின் அதில் பயணம் செய்யும் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி, டெல்லி முதல்வர் ஷீலா தீட்சிட், மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆனந்த் குமார், பா.ஜ.க.மூத்த தலைவர் மதன்லால் குரானா ஆகியோர்.

# மந்திரம், மாயம் என்று மக்களை ஏமாற்றுகின்ற தந்திரம் சிலரின் வயிற்றுப் பிழைப்புக்கான வழி

**புத்தூர் மேற்கைச் சேர்ந்த ஒருவரின் பரிதாபக் கதை இது. செய்வினை என்ற சொல்லினால் இன்று எத்தனையோ அப்பாவிகள் அபாண்டக் குற்றச் சாட்டுக்களுக்கு ஆளாகி நிம்மதி இழந்து தடுமாறுகிறார்கள் என்பதற்கு இக்கதை ஒரு உதாரணம், சம்பந்தப்பட்டவரே தன் கதையைக் கூறுகிறார் படியுங்கள்.**

### திருமணம்

1961ஆம் ஆண்டு நான் திருமணம் செய்தேன். அப்பொழுது எனது மனைவிக்கு அண்ணனும் பன்னிரண்டு வயதில் கால் முடமான ஒரு சகோதரியும் முறையே எட்டுவயதும், ஐந்து வயதும் கொண்ட இரண்டு சகோதரிகளும் பத்துமாதம் நிறைந்த ஒரு தம்பியும் இருந்தார்கள். நானும் எனது மனைவியும் இவர்களை எங்கள் குழந்தைகளைப் போலவே தான் நடத்திவந்தோம். காலப்போக்கில் எங்களுக்கு மூன்று ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர்.

எமக்குச் சீதனமாகத் தரப்பட்ட அவர்களுடைய காணியின் ஒரு பகுதியிலேயே நாமும் ஒரு வீடு கட்டிக் கொண்டோம். நான் மட்டும் அவர்கள் வீட்டுக்குச் செல்லவில்லை. அதேநேரம் எனது மனைவியும் பிள்ளைகளும் பெரும்பாலும் அங்கேயே இருந்து வந்தார்கள். அவர்களும் எங்கள் வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள். காலகதியில் மேலே குறிப்பிட்ட எட்டு வயதுப் பெண் குழந்தை வளர்ந்து பீடிக் கம்பனிக்கு பீடி சுற்றிச் சம்பாதிக்கத் தொடங்கினாள். அவளுக்கு இருபது வயதாகிறது.

### மாப்பிள்ளை

இப்படி இருக்கும் பொழுது தான் அவர்களுக்குத் திருமணப் பேச்சு நடந்தது. கொக்குவிலிருந்து ஒரு மாப்பிள்ளை தீர்மானிக்கப் பட்டது. திருமணத்திற்கான சீதனப் பணத்தை உடன் கொடுக்கமுடியாமல் போனதால் திருமணப் பதிவை ஐப்பசி மாதத்தில் வைத்து திருமணத்தைத் தைமாதத்தில் வைத்துக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி ஐப்பசி மாதத்தில் திருமணப்பதிவும் நடைபெற்றது. அதன் பின்பு மாப்பிள்ளை தொடர்ந்து மாலையில் வந்து காலையில் செல்ல ஆரம்பித்தார்.

இதை எனது மாமனார் வீட்டில் யாரும் தடுக்கவில்லை. ஆனால் எனக்கும் எனது மனைவிக்கும் அந்த முறை பிடிக்கவில்லை. காரணம் திருமணத்திற்கு முன்னர் இந்து முறைப்படி ஆணும் பெண்ணும் தனித்து விடப்படுவதில்லை. இதை நான் ஞாபகப்படுத்தி பலமுறை கண்டித்திருக்கிறேன். அதை யாரும் சட்டைசெய்யவில்லை.

### நகைகள் வாங்கியமை

திருமணத்திற்கான நகைகள் வாங்கவேண்டி வந்தபொழுது நானும், எனது மனைவியும் மாமனாரும் போய் வாங்கி வந்தோம். அதில் முக்கியமான ஒரு நகையைத் திருப்பி மாற்றவேண்டி வந்தபோது மீண்டும் நானும் எனது மனைவியும், மணமகளான மைத்துனியும் போய் நகையை மாற்றிக்கொண்டு அன்று ஒருபடமும் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தோம். அன்று நடந்த சம்பவத்தை யாரோ மாப்பிள்ளையிடம் தவறுதலான முறையில் சொல்லி விட்டார்கள். அன்றிலிருந்தே அவரின் மனதில் சந்தேகம் குடிகொள்ளத் தொடங்கிவிட்டது. அதன்பின்பு எனக்கு உடல் நலமில்லாமல் படுத்தபோது தான் குறிப்பிட்ட திருமண நாளும் வந்தது.

### என் பங்கு

அதில் என்னால் போதிய அக்கறை எடுத்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது. அதுகூட மாப்பிள்ளைக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது என்பது பின்னர்தான் தெரிய வந்தது. திருமணம் முடிந்த மூன்றாம் நாள் இருவரும் படத்திற்குப் புறப்பட்டார்கள். அன்று இருவரும் பஸ்ஸுக்காகக் காத்திருந்தபொழுது அவரின் தாய், தந்தையர் பஸ்ஸில் வந்து இறங்கியவர் அன்று படத்திற்குப் போகவிருந்த திட்டத்தை ரத்தாக்கி தாய், தந்தையுடன் வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். வரும் வழியில் நானும் எதிர்ப்பட்டேன்.

அப்பொழுது நான், "திருமணம் முடிந்தவுடன் முதலில் ஒரு கோவிலுக்குப் போகாமல் ஏன் படத்திற்குப் போக நினைத்தீர்கள்?" என்று கேட்டுவிட்டு மறுநாள் ஒரு காரை ஒழுங்குசெய்து எனது மனைவியுடன் (நான் நீங்கலாக) எல்லோரும் கோவிலுக்குப் போய் வந்தார்கள். அடுத்த நாள் நண்பகல் நான், என் மனைவி, மைத்துனி, அவள் கணவன் ஆகிய நால்வரும் எனது செலவில் படத்திற்கு எனது கண்டிப்பின் நிமித்தம் போய் வரத் தீர்மானித்துப் புறப்பட்டோம். அன்று தியேட்டரில் அவர்

**திருமணத்துக்கு முன்பே தன் கணவனோடு உறவு கொண்டிருந்த பெண் கர்ப்பவதியாகியதும் மயக்கம் போட்டு விழ ஆரம்பித்தார். பெண்ணின் மைத்துனர் 'செய்வினை' செய்துவிட்டார் என்று எல்லோரும் சொன்னார்கள்.**

நடந்து கொண்ட விதத்திலிருந்து நான் ஒரு உண்மையை உணர முடிந்தது. அதாவது கணவன், மனைவிக்குள் சுமுகமான உறவு இல்லையென்பது. படம் முடிந்து திரும்பி வரும் பொழுது மைத்துனியிடம் 'ஏன் உனது கணவன் இப்படி நடந்து கொள்கிறார்' என்று கேட்ட பொழுது, அவள் அன்று நாங்கள் மூவரும் படத்துக்குப் போனதுபற்றி துருவித் துருவிக் கேட்டதாகச் சொன்னாள். அன்றிரவு நான் என் மனைவியிடம், ''உனது தங்கையின் கணவன் என்னைப் பற்றி ஏதோ தவறுதலாக எண்ணியிருக்கிறார். ஆகவே, இனி அவர்கள் விஷயத்தில் நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இனி அவர்களை நாம் ஓர் இடமும் கூட்டிக் கொண்டுபோக முயற்சி செய்யக் கூடாது" என்று சொல்லி வைத்தேன்.

### மயக்கமும் மந்திரமும்

அதன் பின்பு சில தினங்களில் திருமணத்திற்கு முன்பே உடலுறவு கொண்ட காரணத்தினால் ஏற்கனவே கர்ப்பவதியாகியிருந்த மைத்துனி இரவில் திடீர் மயக்கம் போட ஆரம்பித்தாள். சிலவேளைகளில் பகலிலும் அம்மாதிரி நிகழத் தொடங்கியது. முதலில் அதை ஒரு தெய்வக் குறைபாடு என்று கருதி ஒரு கோவிலுக்கு அழைத்துச் சென்று நூல் கட்டப்பட்டது. அதற்குச் சுகம் காணாத பட்சத்தில் வேறொரு கோவிலுக்கும் அழைத்துச் சென்று மறுமுறையும் நூல் கட்டப்பட்டது. அதற்கும் சுகம் ஏற்படாமல் போகவே, வேறொரு மருத்தீடு விழுத்தும் வைத்தியரிடம் அழைத்துப் போய்க் காட்டப்பட்டாள். அப்படி ஒரு வாரம் கழிந்தது. அதற்கும் சுகம் வராமல் போகவே, செய்வினை சூனியம் அகற்றும் ஒரு மந்திரவாதியின் கோவிலுக்கு அழைத்துச் செல்லப் பட்டாள். அன்றுதான் அவள் உடுக்குகளின் ஓசைக்கு ஆடத்தொடங்கி, கணவனின் தங்கையின் கணவர் தான் செய்வினை செய்ததாகவும், காரணம் அவருடைய சகோதரியை இருக்கு மணம் முடிக்க எதிர்பார்த்திருந்ததாகவும் அது முடியாமல் போகவே இப்படி செய்வினை செய்ததாகவும் ஆட்டத்தின்போது சொல்லப்பட்டது.

அதைக் கேட்ட அவளின் கணவன் மறுநாள் தனது மைத்துனர் வீட்டுக்குச் சென்று, "எனக்கு ஏன் இப்படிச் செய்தீர்கள்?" என்று சண்டையிட்டுவிட்டு வந்தார். இரு தினங்களின் பின்னர் இணுவிலிலுள்ள ஒரு பிரசித்த கோவிலில் கொண்டு போய் பதினைந்து நாட்கள் வரை வைத்திருந்து கொஞ்சம் சுகமாக இருந்தது. அந்தக் கோவிலிலுள்ள ஐயா மாந்திரீகமும், வைத்தியமும் செய்யக் கூடியவர். அவர் கொடுத்த மருந்தினால் ஓரளவு சுகம் வந்திருக்கும்.

### சாத்திரமும், வாய்ப்புலம்பலும்

அன்றுதான் நானும் மனைவியும் சுகம் விசாரிக்கப் போயிருந்தோம். எங்களுடன் திரும்பி வரும் பொழுது, அதே ஊரில் ஒரு பாட்டியார் சாத்திரம் சொல்கிறார் என்று கேள்விப்பட்டு, எனது மாமியாரின் விருப்பப்படி அங்கு சென்றோம். முதலில், எனது மைத்துனிக்குத் திருமணம் முன்பு பேசி மறுத்தவர்களின் செய்வினை என்றும், பின் அவள் கணவனின் மைத்துனர் தான் இதைச் செய்தது என்றும் கூறி முடித்தார்.

அன்றே நாங்கள் வீடு வந்து விட்டோம். மறுநாள் மைத்துனியின் கணவனின் ஒன்றுவிட்ட சகோதரன் ஒருவர் என்னிடம் வந்து, மேற்படி மைத்துனி நித்திரையில் வேறொரு ஆடவனின் பெயரைச் சொல்வதாகவும் அவள் வேறு யாரையும் திருமணம் செய்ய மனதில் எண்ணியிருந்தவளா? என்று மாப்பிள்ளை தன்னிடம் வந்து கேட்டதாகவும் சொன்னார். இது கேட்டவுடன் நான் மிகவும் ஆத்திரப்பட்டு அன்றிரவே எனது வீட்டில் எனது மனைவியின் தாய், தந்தையரை அழைத்து, முழுவிபரங்களையும் கூறி அவளுக்குப் பேய் பிடிக்கவில்லையென்றும், அவளுடைய கணவனுக்குத்தான் மனதில் சந்தேகப் பேய் பிடித்துள்ள தென்றும், முதலில் அவருக்கு அதைப் போக்க வைத்தியம் செய்யும்படியும், அதன் பின்பு அவளை ஒரு நல்ல பிரசவ டாக்டரிடம் காட்டும்படியும் சொல்லி, உங்களுக்கு முடியாவிட்டால் ரூபா நூறு எடுத்துக் கொண்டு என்னுடன் கொழும்புக்கு வந்தால் டாக்டர் கோவூரிடம் காட்டிச் சுகமாக்க முடியும் என்றும் சொல்லி அனுப்பினேன்.

### பேரிடி விழுந்தது

தனக்கு முன்பே தனது மனைவி வேறு யாருடனோ உடலுறவு வைத்துக் கர்ப்பவதியாகியிருக்கிறாள் என்று அவளின் கணவன் தவறாக நினைத்தபடியால் தான் இவ்வளவும் வந்ததென்று என் மனைவியிடமும் சொன்னேன். மறுநாள் என் அறிவுரைகளையும் உதறித் தள்ளி விட்டு மானிப்பாயிலுள்ள ஒரு பிரபல மாந்திரிகரிடம் கொண்டு சென்றார்கள். அங்கு வைத்துத்தான் என் தலையில் ஒரு பேரிடி விழுந்தது.

அதாவது யார் யாரின் தலையில் வீழ்ந்த பழி என் தலைமேலும், என் எதிர்வீட்டுக்காரரின் தலைமேலும் விழுந்தது. அன்றிரவு நான் இரவு போசனமருந்திவிட்டுப் படுக்கச் சென்றபோது, எங்கள் வீட்டிற்கும் மாமனாரின் வீட்டிற்கும் நடுவிலுள்ள கிணற்றடியில் நின்று கொண்டு எனது மாமனார் வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டி என்னை ஏசிக் கொண்டிருந்தார். அவரின் பேச்சைக் கேட்டதும், ஒருசில நிமிடங்களில் உணர்வற்று வீழ்ந்துவிட்டேன். எனது மனைவி இதைக் கண்டு போட்ட பெருங்கூச்சலில் அயலிலுள்ளவர்கள் வந்து என்னை அருகிலுள்ள ஒரு ஆயுள்வேத வைத்தியரிடம் காட்டி, மருந்து பெற்று வீட்டில் கொண்டுவந்து விட்டுச் சென்றார்கள்.

அதன்பின்பும் எனது மாமனார், மாந்திரிகர் வீட்டில் கும்பம் வைத்தவுடன் இங்கு செய்வினை செய்தவனை அறிவு மயங்கி விழவைத்து விட்டது என்றுதான் சொன்னார். அதன்பிறகு இல்லாத வீண் கற்பனைகளைக் கற்பித்து, நான் எனது மனைவியின் தங்கையையும் திருமணம் செய்ய நினைத்திருந்தேனென்றும் அது நிறைவேற முடியாமல் போனதால் தான் இப்படிச் செய்வினை செய்து அலைய வைக்கின்றேன் என்றும் ஊர் முழுவதும் சொல்லித் திரிகிறார்கள். இதனால் ஊரிலுள்ள பொது ஸ்தாபனங்களிலெல்லாம் பொறுப்பான பதவி வகிக் கும் என்னை மற்றவர்கள் ஒரு மாதிரியே பார்க்கிறார்கள்.

### இடம் மாறி அலையும் அவலம

கேவலம் எனது மாமனாரின் மூடநம்பிக்கையினால் நான் எனது சொந்த வீட்டில் இருக்க முடியாமல் எனது பிறந்த ஊருக்குக் குடும்பத்துடன் போயிருக்க வேண்டிய நிலை வந்துவிட்டது. அவர்களை அலையவைக்க நான் செய்வினை செய்ததாகச் சொல்லித் தேவையற்ற சடங்குகளையெல்லாம் செய்து பெரும் பணத்தைச் செலவு செய்து விட்டார். இப்படி ஒரு பிரச்சினை ஏற்பட்ட பின் எனது குடும்பம் தான் சொந்த வீட்டில் குடியிருக்க முடியாமல் அலைந்து இடம் மாறித் திரிய வேண்டியுள்ளது.

இதை நான் பெரிதும் மன வருத்தத்துடன் தங்களுக்கு எழுதுவது என்னவென்றால், இன்று உலகத்தில் என் மாமனாரைப் போன்றோர் கணக்கற்றோர் இருக்கின்றார்கள். அவர்கள் திருந்த வேண்டும் என்பது தான் என்னுடைய பேரவா.

### டாக்டர் ஏபிரஹாம் கோவூர்

இது பற்றி டாக்டர் கோவூர் சொல்கிறார். சிலரின் வயிற்றுப் பிழைப்புக்காக நடத்தும், மந்திரம், மாயம் என்ற போலி வியாபாரங்களால் மேற்படி நண்பரைப் போல் பலர் பாதிக்கப்படுகின்றனர். முட்டாள்கள் வாழும் வரையில் இப்படியான சோகக் கதைகள் இடம் பெற்றுக் கொண்டேதான் இருக்கும்.

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

முதன்மை நிலை இரண்டில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் தொடர்பான செயலமர்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை முதல் இரு தினங்கள நடைபெறவுள்ளது. (உ)

* * *

(கோப்பாய்)

யாழ். வலயப் பாடசாலைகளில் தரம் 4இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. கோப்பாய்க் கோட்ட ஆசிரியர்களுக்கும் நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்த ஒரு பகுதி ஆசிரியர்களுக்கும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் யாழ்ப்பாணக் கோட்ட ஆசிரியர்களுக்கும் நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த ஏனைய ஆசிரியர்களுக்கும் யாழ். மத்திய கல்லூரியிலும், இச்செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

இதற்கான அறிவுறுத்தல் கடிதங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

* * *

(கோப்பாய்)

பாடசாலை மேம்பாட்டு பயிற்சி வேலைத்திட்ட அதிபர், ஆரம்பப் பிரிவுத் தலைவர் பயிற்சிச் செயலமர்வில் 14, 15ஆம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பங்கு பற்றிய அதிபர் ஆசிரியர்களை நாளை வெள்ளிக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும் செயலமர்வில இணைந்து கொள்ளுமாறு யாழ். வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-79)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறவுள்ள முழுநிலா நாள் கலைவிழா நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் இந்துபோட் இராஜரட்ணம் அரங்கில் கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அஞ்சலதிபர் பி. நடராஜாவும், சிறப்புவிருந்தினர்களாக ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் கே. தில்லன்துரை, ஓய்வுபெற்ற அரச அலுவலர் எஸ். மகாலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அறிஞர் கௌரவிப்பு நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார். (உ-79)

# இழந்த பனைகளை ஈடுசெய்ய வேண்டும் பொருண்மிய பொறுப்பாளர் கோரிக்கை

(வட்டுக்கோட்டை)

இயற்கையின் சமநிலையை மனிதன் குழப்பினால், அதனால் அழிவது மனிதனே இது இயற்கை நியதி.

யாழ். குடாநாட்டின் இயற்கை வளமான பனைகள் கண்டபாட்டில் தறிக்கப்படுகிறது. இது விடயத்தில் நாம் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்.

யாழ். மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் ஞானவேல், பனை அபிவிருத்திச் சபை மற்றும் திக்கம் வடிசாலை ஊழியர்களுடன் அண்மையில் இடம் பெற்ற சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் 25 இலட்சம் பனை மரங்களும், 19 இலட்சம் தென்னை மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும் பகுதி கொடிய யுத்தத்தின் விளைவாகவே அழிக்கப்பட்டுள்ளன.

இதனை ஈடுசெய்ய நாம் நடவடிக்கை எடுக்கத் தவறினால் இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாவோம் என்றார். (உ-216)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி. ச. சரணிகா**

(பொஸ்கோ மாணவி)

நல்லூர் தெற்கைச் சேர்ந்த க. சர்வலோகராசா சரணிகா 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 125 புள்ளி களைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு சஜீவன், சஞ்சீவன் (தம்பிமார்) அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, நல்லூர் கோதா சித்தி, லண்டன் மாமா, பிரான்ஸ் அத்தை, மாமா, அவுஸ்ரேலியா மாமா, கனடா மாமா, பாலு மாமா (சந்திரிகா என்ர பிரைசஸ், சிலே வைலன்ட்) பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார், இந்திரன் மாமா [Inestment Promotion Consulatants (P.V.T) Ltd., Tritel Services (P.V.T) Ltd., Gemonics (P.V.T) Ltd., Colombo - 4] ஆகியோர் பல்கலையும் கற்று சிறப்புற வாழ்த்து கின்றார்கள்.

நல்லூர் தெற்கு,
நல்லூர்.

K.S.R. குடும்பத்தினர்.

[C/5013]

# ஜெய்ப்பூர் செயற்கைக்கால் உற்பத்தி அலுவலகத்தை சுண்டுக்குளியில் இயக்குமாறு பலரும் கோரிக்கை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில் இயங்கிவந்து தற்போது இணுவில் மக்லியோட் ஆஸ்பத்திரி வளாகத்தில் இயங்கி வருகின்ற ஜெய்ப்பூர் செயற்கைக்கால் உற்பத்தி செய்யும் திட்ட அலுவலகம் மற்றும் தொழிற்சாலையை மீண்டும் சுண்டுக்குளிக்கு மாற்றும்படி பலரும் கோரி வருகின்றனர்.

இந்த அலுவலகமும், தொழிற்சாலையும் 1999 முதல் பல்வேறு பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இணுவிலுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. ஆயினும் நமது சேவைகளைப் பெறச் செல்லும் மிதிவெடி மற்றும் கண்ணிவெடிகளால் பாதிக்கப்படுபவர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இணுவிலுக்குச் சென்று வருகின்றனர்.

இதன் காரணமாக சுண்டுக்குளியில் அமைந்துள்ள சேதமடைந்த நிலையிலுள்ள கட்டடத்தினைப் புனரமைப்புச் செய்து, குறித்த திட்டத்தினை மீளவும் அங்கு ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற போதிலும் கூட, வேண்டிய நிதியின்மை பெரும் பின்னடைவாக இருந்து வருகின்றதாக கூறப்படுகிறது.

இது இவ்விதமிருக்க இத்திட்டத்தின் சர்வதேச மட்ட பொறியியலாளரும், ஆலோசகருமான, லண்டனைச் சேர்ந்த சிசிலிகுறாஸ் யாழ்ப்பாணம் வருகைதந்து இத்திட்டத்தின் நிலைப்பாடுகள், எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் பற்றி மிகவும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

அத்துடன், சுண்டுக்குளியிலுள்ள சேதமடைந்த கட்டடத்தினைப் புனரமைப்புச் செய்வதற்குளத்தகைய ஏற்பாடுகளை செய்யலாம் என யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் அவர் ஆராய்ந்துள்ளார் எனவும் தெரியவருகிறது.

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் உற்பத்தி செய்யும் திட்டத்துக்கு கடந்த காலங்களில் யு எஸ். எயிட் நிறுவனம், நொறாட், நொவிப் போன்ற பல வெளிநாட்டு நிறுவனங்கள் நிதியுதவி அளித்துவந்தன எனவும், தற்போது இத் திட்டத்துக்கு அவை ஆதரவு வழங்குவதற்கும் பின்னடித்து வருவதாகவும் கூறப்படுகிறது. (உ-77)

## கடையில் கள்வர் கைவரிசை

(தென்மராட்சி)

கைதடிச் சந்தியிலுள்ளவர்த்தக நிறுவனமொன்று நேற்று முன்தினம் இரவு காவலாளிகள் இருவர் கடமையில் இருந்தவேளை, திருடர்களால் உடைக்கப்பட்டு சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவம்பற்றி சாவகச்சேரிபொலிஸார் புலன் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர். (உ-77)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த சித்திரம், சங்கீதம், நடனம ஆகிய பாடங்களின் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நேற்றும் இன்றும் யாழ்.மத்தியகல்லூரியில் இடம்பெற்று வருகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இக் கருத்தரங்கினை தமிழ். சிங்கள வள ஆளணியினர் வழி நடத்தி வருகின்றனர்.

குடாநாட்டிலுள்ள சுமார் 300 ஆசிரியர்கள் இதில் பங்கு கொண்டு வருகின்றனர். (உ-19)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் 223, கே. கே. எஸ். வீதியில் அமைந்துள்ள ஆரிய திராவிடபாஷா விருத்திச் சங்கத்தின் கீழைத் தேசியக் கல்விக் கல்லூரி மண்டபத்தில் இம் மாதம் 22 ஆம் திகதி காலை கருத்தரங்கும் ஒன்றுகூடலும் இடம் பெறவுள்ளது.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா தலைமையில் இடம்பெறும் இவ் ஒன்றுகூடலுக்கு சங்கத்தின் பாலபண்டித, பண்டித மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் வருகை தருமாறு சங்கச் செயலாளர் பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன் கேட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது சங்கத்தினரின் எதிர்காலப் பணிகள் பற்றி ஆராயப்படவுள்ளது. (உ)

## தொழில் முயற்சியாண்மை பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

தொழில் முயற்சியாண்மை பயிற்சி நெறி இம்மாத நடுப்பகுதியில் யாழ்·மாவட்ட தொழிற்துறைத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த தொழில் முயற்சியாண்மை பயிற்சி நெறியினை பயில விரும்புவோர் யாழ் செயலகத்தில் உள்ள மாவட்ட தொழிற்துறைத்திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-6)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

சங்கானைக் கல்விக் கோட்டம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பி. ப. 1 30 மணிக்கு,

16 வயதின் கீழ்ப் பிரிவில் அராலி சரஸ்வதி ம. வித்தி, எதிர் அராலி இந்துக்கல்லூரி,

18 வயதின் கீழ் பிரிவில் வட்டு' மத்திய கல்லூரி எதிர் பண்ணாகம் மெய்கண்டான் ம. வி., அராலி சரஸ்வதி ம. வித்தி. எதிர் வட்டு. இந்துக் கல்லூரி, விக்ரோறியாக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி ஆகியன விக்ரோறியாக கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

## சாவ. நகரசபை நிதிமூலம் சுமார் 43 இலட்சம் செலவில் 6 வேலைத் திட்டங்கள்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபை, அதன் நிதியில் இருந்து 42 இலட்சத்து 95 ஆயிரத்து 628 ரூபா செலவில் ஆறு வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், சாவகச்சேரி சந்தையில் கொட்டகை அமைப்பதற்கு 21 இலட்சத்து 45 ஆயிரத்துத் 90 ரூபாவும் மீன்சந்தை அமைப்பதற்கு 8 இலட்சத்து 47 ஆயிரத்து 230 ரூபாவும் - பன்னிரண்டு மலசல கூடங்கள் அமைப்பதற்கு 9 இலட்சத்து 71 ஆயிரத்து 560 ரூபாவும்,

சாவகச்சேரி பொலிஸ் நிலைய வீதி திருத்தத்துக்கு 91 ஆயிரத்து 471 ரூபாவும் கல்வயல் சண்முகானந்தா வீதி திருத்தத்துக்கு 78 ஆயிரத்து 115 ரூபாவும், நுணாவில் மத்தி ஐயனார் வீதி திருத்தத்துக்கு 1 இலட்சத்து 62 ஆயிரத்து 162 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றிற்கான வேலைத் திட்டங்கள அடுத்தவாரமளவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரியவருகின்றது. (உ-77)

## உதைபந்தாட்ட பயிற்சி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் 22 வயதிற்குட்பட்ட உதை பந்தாட்ட வீரர்களுக்கான பயிற்சியும் தெரிவும் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.4.00மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்ரங்கில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பயிற்சிக்குபிரதேச செயலர் பிரிவு ரீதியாகதலா மூவரைத் தெரிவு செய்து அனுப்புமாறு சகல விளையாட்டு உத்தியோகத்தர்களையும் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கேட்டுள்ளார். (உ-6)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பணிமனையில் யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் திருமதி. ஏ. எவ். ஜே. ரூபசிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது. (உ-6)

## தந்தை செல்வா சிலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின யாழ். தலைமைச் செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள ''தந்தை செல்வா'' வின் சிலை திறப்புவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ)

## 'சூழலியல்' பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு நீர்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் (நியாப்)சூழலியல் பற்றிய பயிற்சி வகுப்பு ஒன்று எதிர்வரும் 24,25ஆம திகதிகளில் திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

24ஆம்திகதி சமூகவலுவூட்டல் அதிகாரிகளுக்கும் 25 ஆம் திகதி விவசாயிகளுக்கும் இந்த சூழலியல் பற்றிய பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்தப்பயிற்சி வகுப்பினை யாழ்.செயலக நியாப் திட்ட அலுவலர்கள் நெறிப்படுத்தவுள்ளனர். (உ-6)

## தாய்லாந்துப் பேச்சு பிரிட்டன் வரவேற்பு

(கொழும்பு)

இருதசாப்தகாலப் போரை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் தாய்லாந்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தையை தாய்லாந்திலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் வரவேற்றுள்ளது.

இது குறித்துதூதரகம்வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் நடத்தப்பட்டு வரும் இப்பேச்சுவார்த்தையானது வரலாற்றில் ஓர் திருப்பு முனையாக அமையும்.

தமிழ் சிங்கள-முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில் தீர்வொன்று காணப்பட வேண்டும்.

கடந்த திங்கட்கிழமைஆரம்பமான இப்பேச்சுவார்த்தையை உலகின் பல நாடுகளும் வரவேற்றுள்ளதுடன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென இலகுகடனடிப்படையிலும் அன்பளிப்பாக பெருந்தொகையான நிதியை வழங்க முன்வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பொதுநூலக வீதி பாவனைக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொதுநூலக வீதியும, திறந்தவெளிஅரங்கு வீதியும் மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், யாழ். பொலிஸ் நிலையத்திற்கும் இவ் வீதி வழியாக இப்போது மாணவர்களும் மக்களும் செல்வதை அவதானிக்ககூடியதாக உள்ளது.

மக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்ட மணிக்கூட்டு வீதியூடாக பொதுநூலகவீதியும் திறந்தவெளி அரங்க வீதியும், திறந்துவிடப்படவேண்டும்என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை 512 வது படையணிக்கூட்டிய மாநாட்டில் கோரிக்கை விட்டமையும் அதற்கு யாழ். குடாநாட்டு இராணுவத்தளபதி இணங்கியிருந்தமையும் தொடர்பாக வலம்புரி 11ஆம் திகதி செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அ. இ. தமிழ்க் காங்கிரஸின் முயற்சி பலிதம் முள்ளிமண் அரணை அகற்றிவிவசாயம் செய்வதற்கு படைத்தரப்பு அனுமதி

மழை காலத்திற்கு முன்னர் வடமராட்சி முள்ளி மண் அரணை அகற்றி விவசாயிகள் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளஅனுமதியளிப்பதாக வடமராட்சி பிரிகேடியர் உறுதியளித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி, சிரேஷ்ட உபதலைவர் ந குமரகுருபரன், துணைச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கடந்த 6 ஆம் திகதி சந்தித்து மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தனர்.

இதன்போது, முள்ளி விவசாயிகளின் நெற்செய்கைக்குத் தடையாக இருக்கும் மண் அரண் விடயம் பற்றியும் அங்கு ஆராயப்பட்டது

இதன் பிரகாரம், பிரதமந்திரி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை யாழ்ப்பாணம் அனுப்பி சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ இது தொடர்பாக வடமராட்சி பிரிகேடியர், கரவெட்டி பிரதேச செயலர், அப்பகுதிக் கிராம சேவையாளர் ஆகியோருடன் நேரில் உரையாடி காலபோக நெற்செய்கைக்கு அனுமதித்துள்ளார்.

இம் மண் அணை அகற்றுவதை துரிதப்படுத்துவது தொடர்பில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அ. விநாயகமூர்த்தி, ஜி. கஜேந்திரகுமார் ஆகியோர் கடந்த 13 ஆம் திகதி சம்பந்தப்பட்ட பிரதேச செயலர், மற்றும் வடமராட்சி பிரிகேடியர் ஆகியோரைச் சந்தித்து உரையாடியதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## 18 வது திருத்தச் சட்டம் நேற்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அரசியல் யாப்புக்கான 18 ஆவது திருத்தச் சட்டம் மின்சக்தி எரிபொருள் அமைச்சர் கருஜெயசூரியாவினால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசியல் யாப்பு மன்றத்தின் உறுப்பினர்களுக்கும், சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களுக்கும் சட்டப் பாதுகாப்பு வழங்குவதே இந்த திருத்தத்தின் நோக்கமாகும்.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பளிக்கும். (உ-8)

ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை
சொல்லாடார் சோரவிடல்
குறள்

# வலம்புரி

## கடிவாளம் யார் கையில்?

அரசும், விடுதலைப் புலிகளும் தாய்லாந்தில் சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பித்துள்ளனர். சமாதானப் பேச்சு வார்த்தை எதிர்பார்த்ததை விட முன்னேற்றகரமானதாக அமைந்துள்ளதாக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் செய்தியாளர்கள் முன்னிலையில் பகிரங்கமாக அறிவித்துள்ளார். அதேபோல் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் சமாதானப் பேச்சுக்கான விருப்பை வெளிப்படுத்தியுள்ளார். அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு நோர்வேயின் பங்கு மிகவும் முக்கியமானது

அதேபோல் பேச்சு நடைபெறுவதற்கான இடங்களை ஏற்பாடு செய்து கொடுத்த தாய்லாந்து அரசின் பங்கும் பாராட்டுதற்குரியது. அவையுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற பெருநோக்கோடு செயற்படுகின்றன.

நிலைமை இவ்வாறு இருக்கும் போது தாய்லாந்தில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைதொடர்பான விடயங்களை உடனுக்குடன் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் கூறவேண்டிய ஓர் சூழ்நிலை உள்ளது. பேச்சுக்கள் முடிந்த கையோடு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் அமைச்சர் மெலிந்த மொறகொடவும் அமெரிக்காவுக்கு விரைய, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் இந்தியாவுக்குச் சென்று பேச்சுக் குறித்த விபரங்களை இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டியதாக உள்ளது.

சமாதானப் பேச்சை நடத்துவது அரசும்-விடுதலைப் புலிகளுமாக இருந்தாலும், பேச்சுக்களின் விபரங்களை இந்தியாவுக்கும்- அமெரிக்காவுக்கும் எடுத்துக்கூறவேண்டிய தேவை உள்ளதெனில் பேச்சுக்களின் கடிவாளத்தை இரண்டு நாடுகளுமே பிடித்துள்ளன என்பது தெளிவாகிறது.

இந்த இரண்டு நாட்டில் எந்த நாட்டோடு பகைத்தாலும் அதன் விளைவு சமாதானப்பேச்சின் குழப்பமாகவே இருக்குமென்பதால் இந்தியாவை ஹெல்கீசன் சமாளிக்க அமெரிக்காவை பீரிஸும்-மெலிந்தமொறகொடவும் சமாளிக்கவுள்ளனர்.

# என் வாழ்க்கை சமூகத்திற்கு உழைப்பதே என்ற

# நாடக, நகைச்சுவை அறிஞர் பேர்னாட்ஷா

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கில மொழியின் வாயிலாக உலக மக்களுக்கு அறிவை வாரி வழங்கிப் புகழ் பெற்ற அறிஞர்களுள் தலை சிறந்தவர் இருவர் ஒருவர் ஜார்ஜ் பெர்னாட்ஷா; மற்றொருவர்எச். ஜி வெல்ஸ் இவர்களில் ஷா மூத்தவர் ''பெர்னார்ட்ஷாவைப்போல் எழுத்தாளராக விளங்கவேண்டும என்றுஇளமையில் ஆவல் கொண்டேன். ஷாவின்மூளையைப் போல் என் மூளை ஆற்றல் மிக்கது அன்று'' என்று எச் ஜி வெல்ஸ் தனது சுயசரிதத்தில் எழுதியுள்ளார். இவ்வாறுவெல்ஸின்நன் மதிப்பைப் பெற்ற ஷா தொண்ணூற்று நான்காம் வயதுவரை தம் சிற்றூரில் உடல் நலத்தோடும் அறிவுத் தெளிவோடும் வாழ்ந்து வந்தார்.

### நூல்களைக் கற்கும் ஆவல் இருந்தது

கல்வித் துறையில் ஷாவுக்கு வாய்ப்புக் குறைவாக இருந்தது போலவே சமூக உறவிற்கும் வாய்ப்பில்லாமலிருந்தது. அவர் வளர்ந்த குடும்பம் சமூகத் தொடர்புகுன்றிய குடும்பமாக இருந்ததுதான்காரணம். சிறுவன் ஷாவுக்குக் கதை நூல்களைப் படிப்பதில் ஆர்வம் இருந்தது அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் பிறந்த ஷா வறுமை காரணமாக தொழில் தேடி லண்டன் மாநகர் சென்றார். லண்டன் நூல் நிலையத்திற்குச் சென்று பல நூல்களைப் படித்தார்.

இசையில் ஓரளவு பயிற்சி பெற்று இருந்த ஷா லண்டனில தொழில் என்று ஏற்றது இசைக் கலைஞர் ஒருவருக்கு உதவியாளராக இருந்ததே. ஐந்து ஆண்டுகள் உழைத்து ஐந்து நாவல் எழுதியதால், எழுதும் பயிற்சி பெற்றாரே அல்லாமல் எழுத்தாளராக வெற்றி பெறவில்லை. அவரது நாவல்களை எவரும் வெளியிட முன் வரவில்லை. பின்னர் நாடகங்கள் எழுதத் தொடங்கினார்: கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதினார். இதன் காரணமாகப் பத்திரிகைகளில் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது: ஆனால் அங்கு வேலை செய்ய அவர் மறுத்துவிட்டார். நாடகம் எழுதுவதில் ஈடுபட்ட ஷா எழுதிய முதல் நாடகம் மனைவியை இழந்தவரின் மனைகள் widowersHouses என்ற நாடக மேயாகும். அந்த நாடகம் மேடை யேற்றப்பட்டதாயினும் வெற்றி பெறவில்லை. வாரன்அம்மையாரின்தொழில் Mr's Warrens profession என்ற இரண்டாவதுநாடகம் வெளிவந்த போது அதை நடிக்கக்கூடாதென அரசு தடைவிதித்தது இதனைக் கண்டு துவண்டு விடாதுதொடர்ந்து ஷாநாடகங்களை எழுதினார்.

### செருக்கும் கிறுக்கும்

காண்டிடா(candida) என்ற நாடகம் அவருக்கு வெற்றியைத் தந்தது இந் நாடகம் ஜெர்மனியிலேயே நடிக்கப்பட்டது. இங்கிலாந்தில் அவருக்குவெற்றியைத் தந்த நாடகம்மனிதனும்உயர்நிலைமனிதனும் (man and superman) என்ற நாடகமேயாகும. ஆரம்பத்தில் ஷா கூட்டங்களில் பேசினார்அவர்பேச்சை அலட்சியம் செய்தார்கள் ஈற்றில் அவர்காலத்தில் வாழ்ந்த சொற் பொழி வாளர்களில் ஷா புகழ் பெற்றார்.

அறிஞர் ஷாவிடம் எல்லாரும் கண்டகுறை அவருடைய செருக்கும், கிறுக்குமாகும். அவர் அவ்வாறு நடந்த போதும், எவரும் அவரைவெறுக்கவில்லை. லண்டனில் விஞ்ஞானி ஐன்ஸ்டினைப் பாராட்டி விருந்து நடந்த கூட்டத்தில் பேசிய ஷா 'உலகத்திலேயே இன்று பெரிய மனிதர் இருவர் இருக்கிறார்கள். ஒருவர் நான் மற்றொருவர் ஐன்ஸ்டீன் என்று கூறினார். தான் உலகப் புகழ் பெற்ற ஷேக்ஸ்பியரைவிட சிறந்தவரெனக் குறிப்பிட்டார். 'ஷேக்ஸ்பியர் காலத்தில் பிறந்திருந்து நானும் செய்யுள் வடிவில் நாடகங்கள் எழுதியிருப்பேனானால் நான் அவரைஎளிதில் வென்று அவரை ஏழையாக்கி விட்டிருப்பேன்' என்று ஓரிடத்தில் எழுதியுள்ளார். ஷாவின் நகைச்சுவை பலரைச்சாடியது சிலரை கோபப்படவும் வைத்தது. ஏன் குடிப்பதை வெறுக்கிறீர்கள் என்று கேட்ட போது 'என் குடும்பத்தில் இருந்த முன்னோர் என் போல் பலருடைய பங்குகளையும் சேர்த்துத் தாங்களே குடித்து விட்டிருக்கிறார்கள். ஆகையால் எனக்கு அதில் பங்கு இல்லாமல் போயிற்று' என்பதே அந்த விடையாகும்.

### குறும்பாகப் பேசுபவர்

இங்கிலாந்தில் அறிஞர் ஜி. கே. செஸ்டர்டன் என்பவர் பருமனானவர். ஷாஒல்லியானவர். செஸ்டர்டன், ஷாவைக் கண்டு '' உன்னை யாராவது பார்த்தால் இங்கிலாந்தில் பஞ்சம் வந்திருந்ததாக எண்ணிக் கொள்வார்கள்'' என்றார். அதற்கு ஷா உன்னைப்பார்த்தால் பஞ்சம் வந்ததற்குக் காரணமும் தெரிந்து கொள்வார்கள் என்றார். இஸிடோரா டங்கன்

## புத்தொளி

என்ற புகழ் பெற்ற அழகி ஷாவிடம் தான் அழகியாக இருப்பதாலும் ஷா அறிவில் சிறந்திருப்பதாலும இருவரும் மணந்தால் அழகிலும் அறிவிலும இணையற்ற குழந்தை பிறக்குமென்று கூறினாளாம் அதற்கு உடனே ஷா ஆனால் என்னுடைய அழகும் உன்னுடைய அறிவும் அந்தக் குழந்தைக்கு அமைந்து விட்டால் என்ன செய்வது? என்று கேட்டுத் திணற வைத்தாராம்.

அரசினர் ஆஸ்பத்திரிகளும், தனிப்பட்ட மருத்துவ நிலையங்களுக்கும் ஷா கூறிய வேறுபாடுவேடிக்கையானது''மருத்துவ நிலையங்களில நோய் பாதி தீர்வதற்கு முன்பே உன்னை நடுத்தெருவுக்குத் துரத்தி விடுகிறார்கள். ஆனால் தனியார் மருத்துவ இல்லங்களில் நீ சாகும வரையில் உன்னை வெளியேஅனுப்புவதில்லை'' என்பதே அவர் கூறிய வேறுபாடு. ஒரு முறை ஷா நோயுற்றிருந்தபோது பத்திரிகையாளர் அவரை அணுகி ''உங்களுக்கு என்ன நோய், மக்கள் அறியவிரும்புகிறார்கள்''என்றுகேட்டார். ''ஷா இறந்துவிட்டதாகச் சொல்லிவிடுங்கள். அதனால் எனக்கு எவ்வளவோ தொல்லைகுறையும்''என்று துன்பப் படும்போதும் குறுமபாகப் பேசினார்.

மான்செஸ்டர் பத்திரிகையாளர் ஒருவர் ''இக்காலத்தில் நாம் எதிலும் நமபிக்கை இழந்து விட்டோம் அல்லவா?''என்று கேட்டார். ''இல்லவேஇல்லை முன்னெல்லாம் கடவுளிடம்வைத்திருந்த நம்பிக்கையை மாற்றி டாக்டர்களிடம் நமபிகையை வைத்திருக்கிறோம்' என்றார் ஷா.

### இன்பியல் நாடகம்

துன்பியல நாடகங்களை எழுதி ஷேக்ஸ்பியர் புகழ் பெற்றார் ஷா இன்பியல் நாடகங்களையே எழுதினார். 'கொடுமை இலலாமலே தீமையை அழிப்பதற்குநகைச்சுவையால் தான் முடியும், இழி நடை இல்லாமல் நல்ல இணக்கத்தை உறுதிப்படுத்தவும் அதனால்தான முடியும்' என்பது ஷாவின் கொளகை நாடகங்கள் எழுதிப் பணம்திரட்டும்நிலையை ஷா பெற்றது. இங்கிலாந்திலன்று; அமெரிக்காவில்தான். அமெரிக்கர்கள் அவருடைய பல நாடகங்களையும் சலிப்பின்றிக் கண்டு போற்றத் தலைப்பட்ட பிறகே அவருடைய நாடகங்கள் பொருள் ஈட்டிக் கொடுத்தன.

நாடக மேடையில் மரணக் காட்சியை காட்டினால் அல்லாமல், சிறந்த நாடக ஆசிரியராக ஷா விளங்க முடியாது என்று வில்லியம் அர்ச்செர் என்பவர் குறைகூறினார். அந்தக் குறையைப் போக்குவதற்காக ஷா செய்த முயற்சியே 'டாகடரின் திண்டாட்டம்' (Doctor's Dilemmna) என்ற நாடகம்.

### நோபல் பரிசு

அறிஞர் ஷா நாற்பது வயதுக்கு மேல் திருமணம ஆனவர். தன் துணைவியார் டவுன் ஷெண்ட்டுடன் அமைதியான அன்பு வாழ்க்கை வாழ்ந்தவர். குழந்தை இல்லாதவர். 1925ல் ஷாவுக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இது பற்றிச் ஷா குறிப்பிடும் போது 'இந்த ஆண்டில் நான் நூல் ஒன்றும் எழுதி வெளியிடவில்லை உலகம் அதைக் கண்டு விடுதலை உணர்ச்சியோடு மகிழ்ந்து எனக்கு நன்றி பாராட்டிச் செய்த செயல் இது' என்றார். ஆனால் இதற்கான பணத்தை அவர் திருப்பி அனுப்பிவிட்டார். ஆனால் பலரின் வற்புறுத்தலின் பேரில் அப்பணத்தைப் பெற்று இங்கிலாந்துக்கும் சுவீடனுக்கும் இலக்கியத் தொடர்பு அமைக்கும் பணிக்குக் கொடுத்துதவினார்.

ஷா விடாமல் மேற்கொண்ட பொழுதுபோக்கு படிப்புத்தான் தனது எண்பத்தெட்டாவது வயதில் எழுதிய நூலில் கல்வி என்பது ஒருவருடைய இளமையோடும் தொடர்புடையது அன்று இந்த வயதிலும் எனக்கு எவ்வளவோ படிக்கவேண்டியுள்ளது' என எழுதினார்.

### எழுதிக் குவித்தவர்

ஷா எத்தனையோ நாடகங்களை, கட்டுரைகளை எழுதிக் குவித்தார். அவற்றுள் அவருக்குச் செல்வத்தையும்செல்வாக்கையும் தேடித்தந்த நாடகம் 'செயிண்ட்ஜோன், என்றநாடகம் நல்லஉடல, சிறந்தஅறிவு, தெளிந்தநம்பிக்கை இம் மூன்றும் ஷாவின் முதுமையில் கண்டு வியக்கத்தக்கதாக அமைந்தன. வாழ்வைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமலும் அஞ்சாமலும் அவர் வாழ்ந்து வந்தார்.

பத்தொன்பதாம்நூற்றாண்டின் பிற்பகுதியில் தொண்டு செய்யத் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் முதல் ஐம்பது ஆண்டுகளும் ஓய்வில்லாமல் உழைத்துவந்த மேதை 1950 ம்ஆண்டு நவம்பர் முதல் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார். ''என் வாழ்க்கை சமூகத்திற்கு உரிமையானது. ஆகவே சமூகத்திற்கு இயன்றஅளவு உழைப்பதே என் கடமை'' என்று வாழ்ந்த ஷாதனது இலக்கியச் செல்வங்களுடன்இன்றும்வாழ்கின்றார்.

## சாயி அருளமுதம்



அவதாரபுருஷர்களிலும் மற்றும் யாவற்றிலும்நிறைந்திருக்கும் தெய்வீகத்தையறிவதற்குமூன்று கட்டுப்பாடுகள் இன்றியமையாதவை. தனிப்பட்ட ஒருவரே ஆக்கிரமித்துக் கொள்ளும்பொருட்டு எந்த ஒரு முயற்சியையும் மேற்கொள்ளக் கூடாது. இதயத்தில் குடியிருக்கும் ஆத்மாவை வெளிப்படுத்துவதற்குப் புத்தியையும், உணர்வையும் நெறிப்படுத்த வேண்டும், சுயலாபம் சுயநலம் ஆகியவற்றில் அவாவுறாது, அன்புடனும், அந்தரங்கசுத்தியுடனும் ஒவ்வொரு செயலும் செய்யப்படவேண்டும். எலலாவற்றுக்கும் மேலாக இதயத்தினுள்ளே உறையும் இறைவனின் குரலைக்கேளுங்கள், ஒருவர் தவறான செயலொன்றைச் செய்ய எண்ணும் போது அதைத் தவிர்க்கும்படி அந்தக் குரல் எச்சரித்து, எதிர்த்துப் புத்திமதி கூறுகிறது. அந்தச் செயலால் ஏற்படவிருக்கும் வெட்கத்தையும், அவர் எதிர்நோக்கும் தண்டனையையும், அச் செயலால் விளையக்கூடிய அவமானத்தையும் அது சித்திரிக்கிறது.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

## விவசாயத் தொகை மதிப்பீடு

(நெடுந்தீவு)

விவசாயத் தொகை மதிப்பீட்டுப் பணிகள் தற்போது தீவகப் பகுதிகளில் இடம் பெற்று வருகின்றன.

அவ்வப்பகுதிக் கிராம அலுவலர்கள, சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இம் மதிப்பீட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (உ-250)

# அருணோதயா - மகாஜனா உதைபந்தாட்டப் போட்டி

## மைதானத்தில் அடிதடி - கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் மகாஜனாக் கல்லூரி அணிக்கும் இடையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நேற்று மாலை இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டி அடிதடி ரகளையினால் இடைவேளையுடன் நிறுத்தப்பட்டது.

இடைவேளைக்கு முன்னராக மகாஜனாக்கல்லூரி ஒரு கோல் அடித்ததுடன் தண்டனை உதை (பனால்ட்டி) மூலம் மற்றுமொரு கோலைப் போட்டது. தண்டனை உதை மூலம் போடப்பட்ட கோல் சரியானது என மத்தியஸ்தர் நா.கோணேஸ் வழங்கிய தீர்ப்பை அடுத்து அருணோதயாக் கல்லூரி அணியினரும் அவர்களது ஆதரவாளர்களும் மைதானத்தில் இறங்கி மத்தியஸ்தரை தாக்கியுள்ளனர்.

அதேவேளை ஆதவாளர் ஒருவர் மத்தியஸ்தரைக் கத்தியால் குத்த முயன்ற வேளை அதனைத் தடுக்க முற்பட்ட மற்றொரு ஆதரவாளர் கத்திக் குத்துக்கு இலக்காகி கையில் காயமடைந்தார்.

இதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த விடுதலைப் புலிகளின் அரசியல் துறை உறுப்பினர்கள் நிலைமையை கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். (த)

---

# சீரற்ற காலநிலையால் புலிகளின் கடற்பயணம் நேற்று ரத்தானது

(கொழும்பு)

முல்லைத்தீவிலிருந்து மட்டக் களப்புக்கு வாகரைக்கு நேற்று இடம்பெறவிருந்த விடுதலைப் புலிகளின் கடற்பயணம் சீரற்ற காலநிலை காரணமாக இரத்துச் செய்யப்பட்டதாக கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த கடற் பயணத்தில் 170 விடுதலைப்புலி உறுப்பினர்கள் வாகரைக்குச் செல்லவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

---

# ஒக்டோபர் 2ம் வாரத்தில் பாலசிங்கம் வன்னி வருவார்

(சட்டாஹிப்)

தாய்லாந்து சமாதானப் பேச்சு வார்த்தையின் முதற்சுற்று முடிவடைந்துள்ள நிலையில் இலண்டன் திரும்பும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் வன்னிக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாலசிங்கத்தின் வன்னிப் பயணத்திற்கான ஏற்பாடுகளை நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் மேற்கொண்டு வருகிறார்.

வன்னிக்கு வரும் பாலசிங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் குறித்து தலைவர் பிரபாகரனுக்கு விரிவாக விளக்குவதுடன்அடுத்தகட்ட சமாதானப் பேச்சுவார்த்தையில் முன்வைத்து ஆராயப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் அதற்கு முன்னதாக மேற்கொள்ளப்பட வேண்டிய இராஜதந்திர நடவடிக்கைகள் குறித்தும் கலந்தாலோசிக்கவுள்ளனர்.

இதேவேளை பாலசிங்கத்தின் வன்னிக்கான விஜயத்தை அடுத்து அமைச்சர் ரவூப் ஹக்கீமும் வன்னி சென்று பாலசிங்கத்துடன் பேச்சு நடத்துவார். (த)

---

# பதவிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதை அடுத்து உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் 2003ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ம)

---

## தமிழர்களுக்கு சுயாட்சி...

சட்டாஹிப் கடற்படைத்தளத்தில புரிந்துணர்வுடனும் நம்பிக்கையுடனும் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாக அன்ரன் பாலசிங்கம் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்திருப்பதாவது:

தமிழீழ விடுதலைப்புலிகள் இயககம் மூன்று அடிப்படையான அம்சங்களை முன்வைத்துப் போராடி வருகிறது.

தமிழ் மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு;

தமிழ் மக்களுக்கு ஒரு தேசியம உண்டு;

தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு;

ஆகிய இம் மூன்று அடிப்படை அம்சங்களிலும் தமிழர் தாயகத்தில் தமிழர்களுக்கு முழுமையான சுயாட்சி வழங்கப்படவேண்டும். இதனை அரசு வழங்குமானால் அது பற்றி நாம் பரிசீலனை செய்வோம். இது தரப்படாவிட்டால் பிரிந்து சென்று தனி அரசை அமைப்பதற்காகப் போராடவும் தயாராகவுள்ளோம்.

கடந்த ஒரு மாதகாலமாக அமுல்படுத்தப்பட்டு வரும் நிரந்தர யுத்த நிறுத்தத்தால் இயல்பு வாழ்க்கை ஏற்பட்டு வருகிறது, சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது, பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது, பேச்சுவார்த்தைகள் மூலம் இறுதியான தீர்மானத்தை அடையும் வரை வெளிநாட்டு நிறுவனங்கள் காத்திருந்து ஈழமக்களுக்கு உதவி செய்யுமென நம்பலாம்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் மீளக் குடியமர முடியாமலும் இடிபாடுகளுக்குள்ளான வீடுகளைத் திரும்பவும் கட்ட முடியாமலும் உள்ளார்கள்.

பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்தி தீர்வு காண்பது நீண்டகால நடவடிக்கையாக இருக்கலாம். ஆனால் அரசும் விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களுக்கு உடனடியாக உதவிகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் ஒரு கருத்துடன் செயற்படுகின்றன. இது குறித்து நாம் பேச்சுவார்த்தையில் இணங்கியுள்ளோம். வெளிநாடுகள் இவற்றுக்கு உதவ முன்வந்துள்ளன.

அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்று அரசு கூறிக்கொண்டு மக்கள் குடியிருப்பு எங்கும் இராணுவ முகாம்களை அமைத்துள்ளது.

இதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. இதனால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்நிலையில் இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பாக இரு தரப்பிலும் முக்கிய இராணுவ அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் தலைவர்கள் சேர்ந்து கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வருவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

தாம் புலிகளினால் சுற்றிவளைக கப்படுகிறோமோ என்ற அச்சம் இராணுவத்தினர் மத்தியில் உண்டு இந்நிலையில் இரு தரப்பினரும் மனந்திறந்து பேசித் தீர்மானிக்கவுள்ளோம்.

வடக்கில் இருந்து வெளியேறிய முஸ்லிம் மக்கள் திரும்பவும் வடக்கிற்கு வரவேண்டும் என விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர். இந்நிலையில் வடக்கிற்கு வந்து குடியேறுவதற்கு உந்து சக்தியாக நஷ்ட ஈடு கொடுக்க அரசு இன்னும் முன்வரவில்லை. இதனால் தான் வெளிநாடுகளுடன் கதைத்து அவர்களின் உதவிகளை பெற்று முஸ்லிம் மக்களுக்கு வழங்கி அவர்களை மீளக்குடியமர்த்தவுள்ளோம் என்றும் அன்ரன் பாலசிங்கம் அப் பேட்டியில் தெரிவித்துள்ளார். (ம)

---

## எம்.பியின்...

திபதி பினல் கோட் சட்டத்தின்படி அவருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தன்னால் முடியும் எனவும் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் சமூர்த்தி நிதியிலிருந்து 800 மில்லியனை மீளப்பெற்ற திஸநாயக்கா அதில 360மில்லியனை பான் ஏசியா வங்கியில் வைப்புச் செய்திருந்தார்.

உலக வங்கி ஆலோசனைப்படி ரணில் விக்கிரமசிங்கா சமூர்த்தித் திட்டத்தைக் கைவிட எண்ணியுள்ளார். திட்டம் கைவிடப்பட்டலாம் என்பதே எனது நம்பிக்கை என்று கூறிய ஜனாதிபதி ஆனால் 30ஆயிரம் சமூர்த்தித் திட்ட அலுவலர்கள் தமது வேலை வாய்ப்பை இழக்க மாட்டார்கள் எனவும் தெரிவித்தார். (இ)

---

## நோர்வே...

நடைமுறைப்படுத்துதல் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

இச் சந்திப்பில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிகால் றொட்றிக்கோ கொள்கை அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை நிரந்தரப் பிரதிநிதி சீ.மகேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

---

## புலிகள்...

இப்பத்திரிகையாளர் மாநாட்டிலேயே விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இம் மாநாட்டில் உள்நாட்டு வெளி நாட்டுப் பத்திரிகையாளர்கள் மற்றும் படப்பிடிப்பாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் அன்ரன் பாலசிங்கம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த 20வருடங்களாகப் போராடி வந்துள்ளனர். இந் நிலையில் அவர்கள் இடைக்கால நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உரிமையுடையவர்கள்.

மூன்றாந் தரப்புப் மத்தியஸ்தத்தை வகிப்பவர்கள் தகுதியான அரச பிரதிநிதிகள் என்பதால் இந்த நேரடி சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம் மற்றும் சுய நிர்ணய உரிமைகளுக்காகப் போராடி வந்த விடுதலைப் புலிகள் சுய ஆட்சியை விரும்புகின்றனர். அச் சுய ஆட்சி வழங்கப்படாமல் விட்டால் அடக்குமுறைக்கு எதிரான சுயநிர்ணய உரிமைக்காக அவர்கள் போராடத் தயாராக உள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதால் அவர்கள் தடையை அரசு நீக்கியது இதனால் விடுதலைப்புலிகள் சம உரிமையுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர் என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (ம)

---

## அரசு- புலிகள்...

பெறவுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்குப் பகுதிகளை மனிதாபிமான ரீதியில் கட்டி எழுப்புவதற்கு இருதரப்பும் அடங்கிய கூட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், இக் கூட்டுக் குழு இரு தரப்பினாலும் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றல், மீள் குடியேற்றம் மற்றும் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

---

## யாழ் நகரில்...

தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட வெடிபொருட்களின் விபரம் வருமாறு:

- 24 ஆயிரம் ரவைகள்
- 10 குண்டுகள்
- 2 மோட்டார் குண்டுகள்

(இ)

---

**பொடா சட்டத்தின் கீழ்**

# தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளரும் கைது

(சென்னை)

தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் கே.பரந்தாமன் மாநாமதுரையில் உள்ள அவரது வீட்டில் வைத்து பொடா சட்டத்தின் கீழ் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் சென்னையில் வைத்து பத்திரிகையாளர்களிடம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் பேசியதற்காகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் இவருடன் பொடா சட்த்தின் கீழ் 13 பேர் கைதாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)


"தமிழ் நாளங்களுள் புதிய செவ்விரத்தம் பாய்ச்சப்படட்டும் மரபின் அடித்தளத்தில் புதுமைகள் எழுப்பப்படட்டும்"

திருமறைக் கலாமன்றம் நடத்தும்

தமிழ் விழா-2002

நாளை முதல் மூன்று நாடகளுக்கு

செப்.20,21,22 (வெள்ளி,சனி,ஞாயிறு)

நாடகம் நாட்டுக் கூத்து சொற்பொழிவுகள் கருத்தரங்கு கவியரங்கு இசைக்கச்சேரி நடனங்கள் பாராட்டு விழா நூல் வெளியீடு குழுப்பாடல் ஆகிய அனைத்தும் தமிழ் விழாவை அலங்கரிக்கின்றன

| | |
|---|---|
| செப்.20,21,22 | : மு.ப. 9.30 மணி - பி.ப. 1.00 மணி |
| கருத்தமர்வு | : மன்ற கலைத்தூது மணி மண்டபம் |
| செப்.21,22 | : மாலை 7.00 மணி |
| கலை நிகழ்ச்சி | : மன்ற அரங்கு |



238, பிரதான வீதி, யாழ்ப்பாணம

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

T.P. 021-2222393 website:www.cpateam.org E.Mail : cpajaffna@eureka.lk

திருமறைக் கலாமன்றம

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

11ம் ஆண்டு நிறைவு விழா

நாள் : 19.09.2002 வியாழக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: தலைமைச் செயலகம்
559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்
யா.மா.பே.உ.சங்கம்.

[C/5014]



காணவும் பேணவும் நமெக்கென இருப்பவை வெகுசிலவே

சான்றுகள் இன்றி சரித்திரம் அமையாது

பழைய வீடுகள், பழைய மரத் தளபாடங்கள், மர வாகனங்கள், உலோகப் பாத்திரங்கள் இந்த மண்ணை விட்டு வெளியேறுவதை தடுப்போம். அரும் பொருட்களைப் பாதுகாப்போம். அரும்பொருட்கள் தேசத்தின அடையாளமாகும்.

நாளைய சந்ததிக்காக எஞ்சிய அரும்பொருட்களையும் தொல்பொருட்களையும் பாதுகாப்போம்.

முதுசம் Vii, கலைவட்டம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


இப்பபத்திரிகை வலம்பு அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.